# மார்க்ஸ்

# கூலியுழைப்பும் மூலதனமும்



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# கார்ல் மார்க்ஸ்

# கூலியுழைப்பும் மூலதனமும்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட்
லிமிடெட்
சென்னை

١٥/

மொழிபெயர்ப்பாளர்: ரா. கிருஷ்ணையா

© உரிமைப் பதிவு
தமிழ் மொழிபெயர்ப்பு
''முன்னேற்றப் பதிப்பகம்'', 1974

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

M $\frac{10101-802}{014(01)-81}$ без объявл. 0101010000

பொருளடக்கம்

ஃபிரீட்ரிஹ் எங்கெல்சின் முன்னுரை . . . . . . . 5

கார்ல் மார்க்ஸ்

கூலியுழைப்பும் மூலதனமும்

1 . . . . . . . . 23
2 . . . . . . . . 32
3 . . . . . . . . 40
4 . . . . . . . . 48
5 . . . . . . . . 57

## ஃபிரீட்ரிஹ் எங்கெல்சின் முன்னுரை

பின்வரும் பிரசுரம் 1849 ஏப்ரல் 4 முதலாய் *Neue Rheinische Zeitung*இல்[1] தலையங்கக் கட்டுரைத் தொடராய் வெளி வந்ததாகும். பிரஸ்ஸல்சில் ஜெர்மன் தொழிலாளர் கழகத்தில்[2] 1847 ஆண்டில் மார்க்ஸ் நிகழ்த்திய விரிவுரைகளை இது அடிப்படையாகக் கொண்டது. இப்பிரசுரத்தின் அச்சேறிய வாசகம் பூர்த்தியுறாத அரைகுறைப் பகுதியாகவே இருந்தது; இதழ் 269ல் கட்டுரையின் முடிவிலிருந்த ''தொடரும்'' என்னும் குறிப்பு நிறைவு எய்தாமலே இருந்துவிட்டது; ஹங்கேரியின்மீது ருஷ்யர்களின் படையெடுப்பு[3], டிரெஸ்டனிலும் இஸெர்லோனிலும் எல்பர்பெல்டிலும் பலாட்டினேட்

---

[1] *Neue Rheinische Zeitung. Organ der Demokratie* [''புதிய ரைனிஷ் செய்தியேடு. ஜனநாயக இதழ்'']—1848 ஜூன் 1 முதல் 1849 மே 19 வரை கலோனில் வெளிவந்த தினசரிச் செய்தியேடு. மார்க்ஸ் இதன் தலைமை ஆசிரியராகவும், எங்கெல்ஸ் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் இருந்தனர்.—[பதிப்பாசிரியர்.]

[2] ஜெர்மன் தொழிலாளர் கழகம்—பெல்ஜியத்தில் தங்கியிருந்த ஜெர்மன் தொழிலாளர்களிடையே அரசியல் அறிவை வளர்க்கவும், விஞ்ஞானக் கம்யூனிசக் கருத்துக்களைப் பரப்பவும் 1847 ஆகஸ்டு இறுதியில் மார்க்சும் எங்கெல்சும் பிரஸ்ஸல்சில் நிறுவிய கழகம்.—[பதிப்பாசிரியர்.]

[3] இங்கு குறிக்கப்படுவது ருஷ்ய ஜார் மன்னர் முதலாம் நிக்கலாயினது படைகள் 1849ல் ஹங்கேரியின் மீது நடத்திய படையெடுப்பு. ஹங்கேரியப் புரட்சியை நசுக்குவதற்காகவும் ஆஸ்திரிய ஹாப்ஸ்பர்க் வம்சத்தினரின் ஆட்சியை மீண்டும் இங்கு நாட்டுவதற்காகவும் இந்த படையெடுப்பு நடைபெற்றது.—[பதிப்பாசிரியர்.]

டிலும் நடைபெற்ற எழுச்சிகள்[1], இந்நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து இந்தச் செய்தியேடு நசுக்கப்பட்டது (1849 மே 19)—இப்படி ஒன்றன்பின் ஒன்ருய் நெருக்கியடித்துக் கொண்டு வந்த நிகழ்ச்சிகளால் ஏற்பட்ட விளைவு இது. தொடர்ச்சியின் கையெழுத்துப் பிரதி மார்க்சின் மறைவுக்குப் பிறகு அவருடைய எழுத்துக் குறிப்புகளிடையே காணப்படவில்லை.

**கூலியுழைப்பும் மூலதனமும்** பிரசுர வடிவில் தனி வெளியீடாய்ப் பல பதிப்புகளில் வெளிவந்திருக்கிறது; கடைசியாய் வெளிவந்தது ஹோட்டிங்கென்-ஸூரிக் ஸ்விஸ் கூட்டுறவு அச்சகத்தால் 1884ல் பிரசுரிக்கப்பட்ட பதிப்பு. இது வரை வெளியான பதிப்புகளில் மூலத்தின் வாசகம் எந்த மாற்றமுமின்றி அப்படியே வெளியிடப்பட்டிருந்தது. ஆனுல் தற்போதைய புதிய பதிப்பு பிரசார வெளியீடாய் 10,000 பிரதிகளுக்குக் குறையாமல் வினியோகிக்கப்படப் போகின்றது. ஆகவே இந்த நிலைமைகளில் மாற்றம் ஏதுமில்லாமல் இந்த மூலம் அப்படியே மறுபதிப்பாய் வெளியாவதை மார்க்ஸ் ஆமோதித்திருப்பாரா என்னும் கேள்வி இன்றியமையாதவாறு என் எதிரே எழவே செய்தது.

நாற்பதாம் ஆண்டுகளில் மார்க்ஸ் அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய தமது விமர்சனத்தை இன்னும் முடித்தாகவில்லை. ஐம்பதாம் ஆண்டுகளின் கடைப் பகுதியில்தான் இது முடிவடைந்தது. ஆகவே **அரசியல் பொருளாதார விமர்சனம், ஒரு காணிக்கை** (1859) என்னும் நூலின் முதற் பாகத்துக்கு முன்னதாய் வெளிவந்த அவருடைய நூல்கள், 1859க்குப் பிற்பாடு எழுதப்பட்டவற்றிலிருந்து சில விவரங்களில் மாறுபடுகின்றன; பிற்காலத்திய நூல்களின் கண்ணேட்டத்திலிருந்து பார்க்கையில் விரும்பத் தகாதனவாயும் தவறுனவையாகவுங்கூட தோன்றும் தொடர்களும் முழு வாக்கியங்களும் அந்நூல்களில் அடங்கியுள்ளன. பொது வாசகர்களுக்கான சாதாரணப் பதிப்புகளில் ஆசிரியரின் சிந்தனு வளர்ச்சியின்

[1] *1849 மே—ஜூலை மாதங்களில் ஜெர்மனியில் நடைபெற்ற மக்கள் எழுச்சிகள் இங்கு குறிப்பிடப்படுகின்றன. ஃபிராங்பர்ட் தேசிய சபையால் 1849 மார்ச்சில் ஏற்கப்பட்ட அரசியலமைப்பு சட்டத்தை ஜெர்மன் அரசுகளில் பலவும் நிராகரித்ததும், இச்சட்டத்தை ஆதரித்து மக்கள் இந்த எழுச்சிகளை நடத்தினர்.—[பதிப்பாசிரியர்.]*

ஒரு கட்டமாய் இந்த முந்தியக் கருத்தோட்டத்துக்கும் ஓர் இடமுண்டென்பதையும், இந்தப் பழைய நூல்கள் மாற்றம் ஏதுமின்றி மறுபதிப்பாய் வெளியிடப்படுவது ஆசிரியருக்கும் மற்றும் வாசகப் பொது மக்களுக்குமுரிய மறுக்க முடியாத உரிமையாகுமென்பதையும் கூறத் தேவையில்லே. அப்பொழுது நான் இந்நூல்களில் ஒரு வார்த்தையையுங்கூட மாற்ற வேண்டுமெனக் கனவிலும் நினைத்திருக்க மாட்டேன்.

ஆனல் அனேகமாய் முழு அளவுக்குத் தொழிலாளர்கள் இடையிலான பிரசாரத்துக்கென ஒரு புதிய பதிப்பு வெளியிடப்படுமாயின், அது வேறொரு விவகாரமாகும். இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் மார்க்ஸ், பழைய வழியில் 1849லிருந்து எடுத்துரைக்கப்பட்டு வந்ததை நிச்சயமாய்த் தமது புதிய கருத்தோட்டத்துக்கு இசைவாய் மாற்றியிருப்பார். அவசியமான எல்லா விவரங்களிலும் இந்தக் குறிக்கோள் ஈடேறுவதற்குத் தேவையான சிற்சில மாற்றங்களேயும் இடைச்செருகல்களேயும் இந்தப் பதிப்புக்காகச் செய்ய முற்படும் எனக்கு, மார்க்ஸ் எப்படிச் செய்திருப்பாரோ அதே முறையில்தான் செயல்படுகிறேன் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லே. ஆகவே முன்கூட்டியே நான் வாசகரிடம் தெரிவித்துக் கொள்கிறேன்: இந்தப் பிரசுரம் 1849ல் மார்க்ஸ் எழுதியதைப் போன்றதாயில்லே, 1891ல் எப்படி எழுதியிருப்பாரோ ஏறத்தாழ அதைப் போன்றதாய் இருக்கிறது. தவிரவும் மெய்யான வாசகம் மிகப் பல பிரதிகளில் புழக்கத்தில் இருந்து வருவதால், மாற்றம் ஏதுமின்றி பிற்பாடு ஒரு முழுநிறை நூல் திரட்டை வெளியிட முடிகிற வரை அது போதுமானதாய் இருக்கும்.

என்னுடைய மாற்றங்கள் ஒரேயொரு விவகாரம் பற்றியவை. மூலத்தின்படி தொழிலாளர் தமது உழைப்பைக் கூலிக்காக முதலாளியிடம் விற்கிருர்; ஆனல் இங்குள்ள வாசகத்தின்படி அவர் தமது உழைப்பு சக்தியை விற்கின்ருர். இப்படி நான் மாற்றம் செய்திருப்பதற்குரிய விளக்கத்தைக் கூறுவது எனது கடமையாகும். இது வெறும் சொற் சிலம்பமல்ல, மாருக அரசியல் பொருளாதாரம் அனைத்திலுமே மிக முக்கிய விவகாரங்களில் ஒன்ருகும் என்பதைத் தொழிலாளர்கள் கண்டு கொள்ளும் பொருட்டு, நான் அவர்களுக்கு இந்த விளக்கத்தைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். படிக்காத

தொழிலாளர்கள்—மிகவும் சிக்கலான பொருளாதாரப் பகுத்தாய்வுகளையும் சுலபமாய் இவர்களுக்குப் புரிய வைத்து விட முடிகிறது—மண்டைக் கனம் கொண்ட நமது "மெத்தப் படித்தவர்களைக்" காட்டிலும்—இப்படிப்பட்ட சிக்கலான பிரச்சினைகள் இந்த மெத்தப் படித்தவர்களுக்கு வாழ்நாள் முழுதும் தீராப் புதிர்களாகவே இருக்கின்றன—எப்படி மிகப் பெரிதும் மேம்பட்டவர்களாவர் என்பதை ஐயமற முதலாளித்துவ வர்க்கத்தினர் தெரிந்துகொள்ளும் பொருட்டு நான் இவர்களுக்கு இந்த விளக்கத்தைக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சம்பிரதாய அரசியல் பொருளாதாரம்[1] தொழில் துறை நடைமுறையிலிருந்து, அப்பொழுது நடப்பிலிருந்த பட்டறையதிபர் கண்ணோட்டத்தை, அதாவது தமது தொழிலாளர்களுடைய உழைப்பைத் தாம் பணம் கொடுத்து வாங்கிக் கொள்கிறோம் என்னும் அவரது கண்ணோட்டத்தை அப்படியே எடுத்தாண்டது. தொழில், வர்த்தகத் தேவைகளுக்கு, கணக்குப் பதிவுக்கும் விலை கணக்கீடுகளுக்கும் இந்தக் கண்ணோட்டம் போதுமானதாகவே இருந்தது. ஆனால் வெளித் தோற்றத்தை நம்பி இதைப் பெயர்த்தெடுத்து அப்படியே அரசியல் பொருளாதாரத்தில் கையாண்டதும், அங்கே இது மெய்யாகவே வியப்பூட்டும் தவறுகளையும் குழப்பங்களையும் உண்டாக்கிற்று.

எல்லாப் பண்டங்களின் விலைகளும், "உழைப்பு" என்பதாய்த் தான் குறிப்பிடும் அந்தப் பண்டத்தின் விலையும் இவற்றில் அடங்கலாய், இடையறாது மாறிக் கொண்டிருப்பதைப் பொருளியலானது கவனிக்கிறது; விலைகள் பெருமளவுக்கு முற்றிலும் சந்தர்ப்பவசத்தால் நிர்ணயிக்கப்படுவ

[1] மூலதனத்தில் மார்க்ஸ் எழுதியதாவது: "...சம்பிரதாய அரசியல் பொருளாதாரம் என்பதன் மூலம் நான், டபிள்யூ. பெட்டியின் காலம் முதலாய், முதலாளித்துவச் சமுதாயத்தின் மெய்யான பொருளுற்பத்தி உறவுகளை ஆராய்ந்து வந்துள்ள அந்தப் பொருளாதாரத்தைக் குறிப்பிடுகிறேன்." (கார்ல் மார்க்ஸ், மூலதனம், பாகம் 1, மாஸ்கோ, 1954, பக்கம் 87) பிரிட்டனில் ஆடம் ஸ்மித், டேவிட் ரிக்கார்டோ ஆகியோர் சம்பிரதாய அரசியல் பொருளாதாரத்தின் மிகவும் முக்கியப் பிரதிநிதிகளாய் இருந்தனர்.—[பதிப்பாசிரியர்.]

தாய்த் தோன்றும்படி மிகப் பல்வேறுபட்ட நிலைமைகளின் விளைவாய், பண்டங்களின் உற்பத்தியுடன் அடிக்கடி எந்தச் சம்பந்தமும் இல்லாத நிலைமைகளின் விளைவாய் இந்த விலைகள் ஏறியும் இறங்கியும் செல்வதைக் கவனிக்கிறது. ஆகவே அரசியல் பொருளாதாரமானது ஒரு விஞ்ஞானமாய்த் தோற்றமெடுத்ததும்[1], பண்டங்களின் விலைகளை நெறிப்படுத்தி ஆட்சி புரிவதாய் வெளிப்பார்வைக்குத் தோன்றிய இந்தச் சந்தர்ப்பவசத்தின் பின்னால் மறைந்திருக்கும் விதியை, உண்மையில் இந்தச் சந்தர்ப்பவசத்தை ஆட்சி புரியும் விதியைக் கண்டறிந்து கொள்வது அதன் முதற் பணிகளில் ஒன்றாகியது. ஓயாமல் ஏறியிறங்கிக் கொண்டும், இப்பொழுது மேல்நோக்கியும் இப்பொழுது கீழ்நோக்கியும் அலைவுற்றுக் கொண்டும் இருக்கும் பண்ட விலைகளினுள் அமைந்த உறுதியான மையப் புள்ளியை, எதை மையமாய்க் கொண்டு இந்த ஏற்றயிறக்கங்களும் அலைவுகளும் திரும்புகின்றனவோ அந்த மையப் புள்ளியை அரசியல் பொருளாதாரம் கண்டறிந்து கொள்ள முயன்றது. சுருங்கக் கூறினால், அது விலைகளை அடக்கியாளும் விதியாகிய பண்டங்களது **மதிப்பை,** விலை ஏற்றயிறக்கங்கள் யாவும் எதைக் கொண்டு விளக்கப்பட வேண்டுமோ, இவை யாவற்றுக்கும் இறுதிக் காரணமாய் எதைக் குறிப்பிட வேண்டுமோ அந்த மதிப்பைக் கண்டு கொள்ளும் பொருட்டு, பண்ட விலைகளிலிருந்து தனது பரிசீலனையை ஆரம்பித்தது.

பண்டத்தின் மதிப்பானது அப்பண்டத்தின் உற்பத்திக்கு அவசியமாய் அதனுள் அடங்கியுள்ள உழைப்பால் நிர்ணயிக்கப்படுகிறது என்பதைச் சம்பிரதாய அரசியல் பொருளாதாரம் கண்ணுற்றது. இந்த வியாக்கியானத்தை அளித்ததுடன் அது திருப்தியடைந்துவிட்டது. நாமும் தற்போதைக்கு இங்கே சற்று நின்று பரிசீலிக்கலாம். வாசகர் தவறான முடிவு

[1] டூரிங்குக்கு மறுப்பில் எங்கெல்ஸ் இவ்வாறு எழுதினார்: ''பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் சிற்சில மேதைகளின் மனத்தில் உருப்பெற்றது என்றாலும், அரசியல் பொருளாதாரத்தை அதன் குறுகிய அர்த்தத்தில், ஃபிசியோகிராட்டுகள், ஆடம் ஸ்மித் இவர்களால் வரையறுத்துக் கூறப்பட்ட அதன் நேர்ப் பொருளில், பிரதானமாய்ப் பதினெட்டாம் நூற்றாண்டின் மகவாகவே கொள்ள வேண்டும்.'' (ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ், டூரிங்குக்கு மறுப்பு, மாஸ்கோ, 1962, பக்கம் 209.)—[பதிப்பாசிரியர்.]

களுக்கு வருவதைத் தவிர்க்கும் பொருட்டு, இந்த வியாக்கியானம் தற்போது முற்றிலும் குறைபாடானதாகிவிட்டதை நினைவுபடுத்த விரும்புகிறேன். உழைப்பானது மதிப்பைப் படைப்பதாயிருக்கும் இத்தன்மையினை முதன்முதல் மார்க்ஸ் தான் தீர்க்கமாய் ஆராய்ந்தவர். இதை ஆராய்ந்த போது அவர், ஒரு பண்டத்தின் உற்பத்திக்கு அவசியமானதாய்த் தோன்றக்கூடிய, அல்லது மெய்யாகவே அவசியமானதாய் இருக்கவுங்கூடிய எல்லா உழைப்பும், செலவிடப்பட்ட உழைப்பின் அளவுக்கு ஏற்ற ஒரு பரிமாணத்தில் எல்லா நிலைமைகளிலுமே அப்பண்டத்துக்குக் கூடுதல் மதிப்பை அளித்துவிடுவதில்லை என்பதைக் கண்டுபிடித்தார். ஆகவே இன்று நாம் ரிக்கார்டோ போன்ற பொருளியலாளர்களுடன் சேர்ந்து, ஒரு பண்டத்தின் மதிப்பானது அதன் உற்பத்திக்கு அவசியமான உழைப்பால் நிர்ணயிக்கப்படுகிறது என்று பெரும்போக்காய்ச் சொல்வோமாயின், மார்க்ஸ் குறிப்பிட்ட விலக்கீடுகளையும் கூருமலே கூறுகிருேம் என்பதாகவே எப்பொழுதும் கொள்ள வேண்டும். இங்கு இவ்வளவு போதும்; மார்க்சின் **அரசியல் பொருளாதார விமர்சனம், ஒரு காணிக்கை, 1859,** என்னும் நூலிலும், மற்றும் மூலதனம் முதற் பாகத்திலும் இது பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

ஆனல், உழைப்பின் மூலமான இந்த மதிப்பு நிர்ணயத்தை ''உழைப்பு'' என்னும் பண்டம் குறித்தும் பொருளியலாளர்கள் கையாண்டதும், ஒன்றின்பின் ஒன்ருய்ப் பல முரண்பாடுகளில் அவர்கள் சிக்கிக் கொண்டனர். ''உழைப்பின்'' மதிப்பை நிர்ணயிப்பது எப்படி? அதில் அடங்கியுள்ள அவசியமான உழைப்பால். ஆனல் ஒரு தொழிலாளியின் ஒரு நாளைக்கு, ஒரு வாரத்துக்கு, ஒரு மாதத்துக்கு, ஓர் ஆண்டுக்கான உழைப்பில் அடங்கியிருக்கும் உழைப்பு எவ்வளவு? ஒரு நாளைக்கு, ஒரு வாரத்துக்கு, ஒரு மாதத்துக்கு, ஓர் ஆண்டுக்கான உழைப்புதான் அடங்கியிருக்கிறது. உழைப்புதான் எல்லா மதிப்புகளுக்குமான அளவை என்ருல், பிறகு நாம் ''உழைப்பின் மதிப்பை'' உழைப்பிலேதான் கூற முடியும். ஆனல் ஒரு மணி உழைப்பு ஒரு மணி உழைப்புக்குச் சமம் என்று மட்டும்தான் நமக்குத் தெரியுமெனில்,ஒரு மணி உழைப்பின் மதிப்பைப் பற்றி நாம் ஏதும் அறியாதோரே ஆவோம். இது நம்மை ஒரு மயிரிழைகூட நமது குறிக்கோளை நெருங்கி

வரச் செய்யவில்லை; சுற்றிச் சுற்றி வட்டத்தில் வந்து கொண்டிருக்கிறோம்.

ஆகவே சம்பிரதாயப் பொருளியல் மற்றொரு திசையில் முயன்று பார்த்தது. அது கூறிற்று: பண்டத்தின் மதிப்பு அதன் உற்பத்திச் செலவுக்குச் சமமானது. ஆனால் உழைப்பின் உற்பத்திச் செலவு என்பது என்ன? இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் பொருட்டு பொருளியலாளர்கள் தர்க்கவாதத்துக்குக் கொஞ்சம் புறம்பாய்ச் சென்று மோசடி புரியவேண்டியிருக்கிறது. துரதிர்ஷ்டவசமாய் உழைப்பின் உற்பத்திச் செலவைக் கணக்கிட முடியவில்லை, ஆகவே அவர்கள் அதற்குப் பதிலாய்த் தொழிலாளியின் உற்பத்திச் செலவை ஆராய முற்படுகின்றனர். இதைக் கணக்கிட்டுக் கூறிவிட முடியும். இது காலத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப மாறுபடுகிறது, ஆனால் சமுதாயத்தின் குறிப்பிட்ட ஒரு நிலையில், குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில், குறிப்பிட்ட பொருளுற்பத்திக் கிளையில் இதுவும் ஓரளவு குறுகிய வரம்புகளுக்குள்ளாகவேனும் குறிப்பிட்டுக் கூறக் கூடியதாகிவிடுகிறது. இன்று நாம் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் ஆதிக்கத்தில் இருந்து வருகிறோம். இதில் மக்களில் மேலும் மேலும் அதிகரித்து வரும் ஒரு பெரிய வர்க்கமானது கூலியைப் பெற்றுக் கொண்டு, உற்பத்திச் சாதனங்களது உடைமையாளர்களுக்காக — அதாவது கருவிகள், இயந்திரங்கள், மூலப் பொருள்கள், பிழைப்புச் சாதனங்கள் ஆகியவற்றின் உடைமையாளர்களுக்காக—வேலை செய்தால் மட்டுமே வாழ முடிகிறது. இந்த உற்பத்தி முறையின் அடிப்படையில் தொழிலாளியின் உற்பத்திச் செலவானது, அவரை வேலை செய்யக் கூடியவராக்குவதற்கும், வேலை செய்யும்படியான நிலையில் பராமரிப்பதற்கும், மற்றும் முதிய வயது, நோய், அல்லது மரணம் காரணமாய் அவர் நீங்கிய பின் அவர் இடத்தில் ஒரு புதிய தொழிலாளியைப் பெறுவதற்கும்—அதாவது போதுமான எண்ணிக்கையில் தொழிலாளி வர்க்கம் இனவிருத்தி செய்வதற்கும்—சராசரியாய்த் தேவைப்படும் அளவிலான பிழைப்புச் சாதனங்கள், அல்லது அவற்றின் பண விலை, அடங்கியதாகும். இந்தப் பிழைப்புச் சாதனங்களது பண விலை நாள் ஒன்றுக்குச் சராசரி மூன்று மார்க்காய் இருப்பதாய் வைத்துக் கொள்வோம்.

ஆகவே நமது தொழிலாளி அவரை வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் முதலாளியிடமிருந்து நாள் ஒன்றுக்கு மூன்று மார்க் கூலி பெறுகிறார். இதற்காக இந்த முதலாளி பின்வருமாறு கணக்கிட்டுக் கொண்டு தினமும் அவரைப் பன்னிரண்டு மணி நேரம் வேலை வாங்குவதாய்க் கொள்வோம்:

நமது தொழிலாளி—ஒரு கடைசலாளர்—ஓர் இயந்திரத்தின் பகுதியைச் செய்ய வேண்டுமென்பதாகவும், இதை அவர் ஒரு நாளில் செய்து முடித்துவிடுவதாகவும் வைத்துக் கொள்வோம். மூலப் பொருளுக்கு—தேவையான வடிவில் முன்கூட்டியே தயார் செய்யப்பட்டிருக்கும் இரும்பும் பித்தளையும்—இருபது மார்க் ஆகிறது. நீராவி இஞ்சினால் உபயோகித்துக் கொள்ளப்படும் நிலக்கரி, இதே இஞ்சினின் தேய்மானம், மற்றும் நமது தொழிலாளி பயன்படுத்திக் கொள்ளும் கடைசல் இயந்திரத்திற்கும் ஏனைய கருவிகளுக்கும் ஏற்படும் தேய்மானம் ஆகியவை ஒரு நாளைக்குரிய அளவிலும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் நமது தொழிலாளிக்குரிய பங்குக்காகிய அளவிலும் கணக்கிடப்படுகையில் ஒரு மார்க்கின் மதிப்பைக் குறிப்பதாய்க் கொள்வோம். நாம் வைத்துக் கொண்டதுபடி ஒரு நாளைக்குரிய கூலி மூன்று மார்க். ஆக மொத்தத்தில் நமது இயந்திரப் பகுதிக்கு இருபத்து நான்கு மார்க் ஆகிறது. ஆனால் முதலாளி இதற்குப் பதில், தனது வாடிக்கையாளர்களிடமிருந்து சராசரி இருபத்தேழு மார்க் தனக்குக் கிடைக்குமென்று, அதாவது தனது முதலீட்டைக் காட்டிலும் மூன்று மார்க் கூடுதலாய்க் கிடைக்குமென்று கணக்கிடுகிறார்.

முதலாளிக்குக் கூடுதலாய்க் கிடைக்கும் இந்த மூன்று மார்க் எங்கிருந்து வந்தது? சம்பிரதாயப் பொருளியலின் கூற்றுபடி, சராசரியாய்ப் பண்டங்கள் அவற்றின் மதிப்புகளுக்கு ஏற்ற, அதாவது அவற்றில் அடங்கியுள்ள அவசிய உழைப்பின் அளவுக்கு ஏற்ற விலைகளில் விற்கப்படுகின்றன. ஆகவே நமது இயந்திரப் பகுதியின் சராசரி விலையான இருபத்தேழு மார்க் அதன் மதிப்புக்குச் சமமாகும், அதாவது அதில் உள்ளடங்கியுள்ள உழைப்புக்குச் சமமாகும். ஆனால் இந்த இருபத்தேழு மார்க்கில், இருபத்தியொரு மார்க்கானது நமது கடைசலாளர் வேலை செய்ய முற்படுவதற்கு முன்பே இருந்த மதிப்புகளைக் குறிப்பதாகும். இருபது

மார்க் மூலப் பொருள்களில் அடங்கியிருந்தது; ஒரு மார்க் வேலையின் போது உபயோகித்துக் கொள்ளப்பட்ட நிலக்கரியிலோ, உபயோகிக்கப்பட்ட இயந்திரங்களிலும் கருவிகளிலுமோ—இந்தத் தொகை குறிக்கும் மதிப்பால் திறன் குறைக்கப்பட்ட இந்த இயந்திரங்களிலும் கருவிகளிலுமோ—இருந்தது. ஆறு மார்க் எஞ்சியிருக்கிறது, இது மூலப்பொருள்களின் மதிப்புடன் கூட்டப்பெற்ற மதிப்பாகும். ஆனால் நமது பொருளியலாளர்களின் அனுமானத்தின்படி இந்த ஆறு மார்க்கும் மூலப் பொருள்களுடன் நமது தொழிலாளியால் சேர்க்கப்பட்ட உழைப்பிலிருந்துதான் தோன்ற முடியும். இவ்விதம் இவருடைய பன்னிரண்டு மணி நேர உழைப்பு ஆறு மார்க்குக்குரிய புதிய மதிப்பைத் தோற்றுவித்திருக்கிறது. ஆகவே இவருடைய பன்னிரண்டு மணிநேர உழைப்பு ஆறு மார்க்குக்குச் சமமாகும். இவ்வாறு முடிவில் ''உழைப்பின் மதிப்பை'' நாம் கண்டுபிடிப்பதாய்க் கொள்ளலாம்.

''இருங்கள், இருங்கள்!'' என்று நமது கடைசலாளர் கூவுகிறார். ''ஆறு மார்க்கா? ஆனால் நான் மூன்று மார்க்குதானே பெற்றுக்கொண்டேன்! எனது பன்னிரண்டு மணி நேர உழைப்பின் மதிப்பு மூன்று மார்க்குதான் என்று என்னுடைய முதலாளி சத்தியம் பண்ணியல்லவா சாதிக்கிறார்? எனக்கு ஆறு மார்க் தர வேண்டுமென்று கோரினால் என்னைப் பார்த்துச் சிரிக்கிறாரே. இதற்கு என்ன சொல்கிறீர்கள்?''

உழைப்பின் மதிப்பு குறித்துப் பேசி முன்பு நாம் ஒரு நச்சு வட்டத்தில் சிக்கிக் கொண்டோம் என்றால், இப்பொழுது நாம் தீர்க்க முடியாத முரண்பாட்டில் அல்லவா சரியானபடி அகப்பட்டுக் கொண்டுவிடுகிறோம். உழைப்பின் மதிப்பைக் கண்டறிய வேண்டுமென்று தொடங்கினோம், நாம் சீரணிக்கக்கூடியதைக் காட்டிலும் கூடுதலாய் நமக்குக் கிடைத்திருக்கிறது. தொழிலாளிக்குப் பன்னிரண்டு மணி நேர உழைப்பின் மதிப்பு மூன்று மார்க்காய் இருக்க, முதலாளிக்கு அது ஆறு மார்க்காகிவிடுகிறது. இந்த ஆறு மார்க்கில் அவர் மூன்றைத் தொழிலாளிக்குக் கூலியாய்த் தந்துவிட்டு மூன்றைத் தமக்கு எடுத்துக் கொண்டுவிடுகிறார். இவ்விதம் உழைப்புக்கு ஒன்றல்ல, இரண்டு மதிப்புகள் உள்ளன; இரண்டும் ஒன்றுக்கொன்று வெகுவாய் வேறுபடும் மதிப்புகளாகவும் இருக்கின்றன!

பண வடிவில் குறிக்கப்படும் இந்த மதிப்புகளை உழைப்பு நேரமாய் மாற்றுவோமாயின் இந்த முரண்பாடு இன்னுங் கூட அபத்தமானதாகிவிடுகிறது. பன்னிரண்டு மணி நேர உழைப்பின் போது ஆறு மார்க்குக்குரிய ஒரு புதிய மதிப்பு தோற்றுவிக்கப்படுகிறது. ஆகவே ஆறு மணி நேர உழைப்பின் போது மூன்று மார்க் தோற்றுவிக்கப்படுகிறது—பன்னிரண்டு மணி நேர உழைப்புக்காகத் தொழிலாளி பெற்றுக் கொள்ளும் தொகை இது. பன்னிரண்டு மணி நேர உழைப்புக்குச் சமமான மதிப்பாய்த் தொழிலாளி ஆறு மணி நேர உழைப்பின் உற்பத்தியைப் பெறுகின்றார். ஆகவே உழைப்புக்கு இரு மதிப்புகள் இருக்க வேண்டும், இவற்றில் ஒன்று மற்றொன்றைவிட இரு மடங்கு பருமனுடையதாயிருக்கிறது; அல்லது பன்னிரண்டு ஆறுக்குச் சமமாய் இருக்க வேண்டும்! இரண்டும் முற்றிலும் அபத்த முடிவுகள்.

உழைப்பை வாங்குவதாகவும் விற்பதாகவும் உழைப்பின் மதிப்பு என்பதாகவும் பேசும் வரை, எவ்வளவுதான் முக்கினாலும் முனகினாலும் இந்த முரண்பாட்டிலிருந்து விடுபட்டு நாம் வெளிவர முடியாது. பொருளியலாளர்களுக்கும் இதுவேதான் நேர்ந்தது. சம்பிரதாயப் பொருளியலின் கடைசிக் கிளையான ரிக்கார்டோ மரபானது, பிரதானமாய் இந்த முரண்பாட்டுக்குத் தீர்வு காணமுடியாமல்தான் தகர்ந்து போயிற்று. சம்பிரதாயப் பொருளியல் திக்கற்ற நிலையை வந்தடைய வேண்டியதாயிற்று. கார்ல் மார்க்ஸ்தான் இந்நிலையிலிருந்து வெளியே வருவதற்கான வழியைக் கண்டுபிடித்தவர்.

பொருளியலாளர்கள் எதை ''உழைப்பின்'' உற்பத்திச் செலவாய்க் கருதினார்களோ, அது உயிருள்ள தொழிலாளியின் உற்பத்திச் செலவாகுமே அன்றி உழைப்பின் உற்பத்திச் செலவல்ல. இந்தத் தொழிலாளி முதலாளிக்கு விற்றது தமது உழைப்பை அல்ல. ''உண்மையில் அவருடைய உழைப்பு ஆரம்பமானதும், அது அவருடைய உடைமையாய் இல்லாமற் போகிறது; எனவே இனி அவரால் அதை விற்க முடியாது'' என்று மார்க்ஸ் எழுதினார்.[1] அதிகம் போனால் இவர், தமது வருங்கால உழைப்பை வேண்டுமானால் விற்கலாம்,

[1] கார்ல் மார்க்ஸ், மூலதனம், பாகம் 1.—[பதிப்பாசிரியர்.]

அதாவது குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட அளவு வேலை செய்வதாய்ப் பொறுப்பேற்றுக் கொள்ளலாம். ஆனால் அப்படிச் செய்கையில் அவர் உழைப்பை விற்கவில்லை (முதலில் செய்து முடிக்கப்பட்டாலன்றி அது விற்கப்பட முடியாது); குறிப்பிட்ட கூலித் தொகைக்காகத் தமது உழைப்பு சக்தியைக் குறிப்பிட்ட நேரத்துக்கோ (நேரவீதக் கூலியாய் இருந்தால்) குறிப்பிட்ட அளவு பண்ட உற்பத்திக்காக (வேலைவீதக் கூலியாய் இருந்தால்) முதலாளியின் உபயோகத்தில் விட்டு வைக்கிறார். அதாவது தமது உழைப்பு சக்தியைச் சத்தத்துக்கு விடுகிறார் அல்லது விற்கின்றார். ஆனால் இந்த உழைப்பு சக்தி தொழிலாளியின் உடலுடன் ஒன்றியது, அதிலிருந்து பிரிக்க முடியாதது. ஆதலால் அதன் உற்பத்திச் செலவும் அவருடைய உற்பத்திச் செலவும் ஒன்றாகிவிடுகிறது. உழைப்பின் உற்பத்திச் செலவு என்பதாய்ப் பொருளியலாளர்கள் குறிப்பிடுவது உண்மையில் தொழிலாளியின் உற்பத்திச் செலவேதான், ஆகவே அவருடைய உழைப்பு சக்தியின் உற்பத்திச் செலவேதான். எனவே நாம் உழைப்பு சக்தியின் உற்பத்திச் செலவிலிருந்து உழைப்பு சக்தியின் மதிப்புக்குத் திரும்பிச் சென்று, உழைப்பு சக்தியை வாங்குவதும் விற்பதும் பற்றிய அத்தியாயத்தில் மார்க்ஸ் செய்வது போல (மூலதனம், பாகம் IV, 3) குறிப்பிட்ட தரமுள்ள உழைப்பு சக்தியின் உற்பத்திக்குத் தேவையான, சமூக வழியில் அவசியமான உழைப்பின் அளவை நிர்ணயிக்கலாம்.

முதலாளியிடம் தொழிலாளி தமது உழைப்பு சக்தியை விற்ற பிறகு நடப்பது என்ன? அதாவது கூலிக்காக—நேரவீதத்திலான நாட் கூலிக்காகவோ, உற்பத்திப் பொருளின் அளவுக்கு ஏற்ப அமைந்த வேலைவீதக் கூலிக்காகவோ—முதலாளி வசம் தனது உழைப்பு சக்தியை விட்டு வைத்தபின் நடப்பது என்ன? இந்தத் தொழிலாளியை முதலாளி தமது பட்டறை அல்லது தொழிற்சாலைக்கு இட்டுச் செல்கிறார். வேலைக்கு வேண்டியவை யாவும்—மூலப் பொருள்கள், துணைப் பொருள்கள் (நிலக்கரி, வண்ணங்கள் முதலியவை), கருவிகள், இயந்திரங்கள் ஆகிய யாவும்—தயார் நிலையில் இங்கே இருக்கின்றன. தொழிலாளி இங்கே கொத்தடிமை வேலையைத் தொடங்குகிறார். மேற்கூறியது போல அவருடைய நாட்கூலி மூன்று மார்க்காய் இருக்கலாம்—இதை

அவர் நாட் கூலியாய்ப் பெற்ருலும் ஒன்றுதான், வேலைவீதக் கூலியாய்ப் பெற்ருலும் ஒன்றுதான், வித்தியாசம் ஏதும் இல்லை. முன்பு போலவே தொழிலாளி தமது உழைப்பின் மூலம் பன்னிரண்டு மணி நேரத்தில் உபயோகிக்கப்படும் மூலப் பொருள்களுக்கு ஆறு மார்க் பெறுமானமுள்ள புதிய மதிப்பை அளிப்பதாய்க் கொள்வோம். உற்பத்தி செய்யப் பட்ட பொருளை விற்று முதலாளி இந்தப் புதிய மதிப்பைப் பணமாக்குகிருர். இதிலிருந்து அவர் தொழிலாளிக்கு மூன்று மார்க்கைத் தருகிருர்; எஞ்சிய மூன்று மார்க்கைத் தானே எடுத்துக் கொள்கிருர். பன்னிரண்டு மணி நேரத்தில் தொழி லாளி ஆறு மார்க் பெறுமான மதிப்பைத் தோற்றுவிக்கிருர் என்ருல், ஆறு மணி நேரத்தில் அவர் மூன்று மார்க் பெறுமான மதிப்பைத் தோற்றுவித்துவிடுகிருர் என்ருகிறது. ஆகவே தமது கூலியில் அடங்கியுள்ள மூன்று மார்க்குக்கு ஈடான மதிப்பை, முதலாளிக்காக ஆறு மணி நேரம் வேலை செய்ததுமே தொழிலாளி அவருக்குத் திருப்பித் தந்துவிடுகிருர். ஆறு மணிநேர உழைப்புக்குப் பிறகு இருவரிடையிலும் கணக்குத் தீர்ந்துவிடுகிறது, இருவரில் எவரும் மற்றவருக்குத் தர வேண்டியதாய்ச் சல்லிக் காசுகூட பாக்கி நிற்கவில்லை.

''இருங்கள், இருங்கள்!'' என்று முதலாளி இப்பொழுது கூவுகின்ருர். ''ஒரு முழுப் பகலுக்கு, பன்னிரண்டு மணிநேரத் துக்கு வேலை செய்வதற்காக நான் சத்தம் பேசித் தொழி லாளியை அமர்த்தினேன். ஆனல் ஆறு மணி நேரம் அரைப் பகலே ஆகும். ஆகவே மீதி ஆறு மணி நேரமும் முடிவடை யும் வரை தொடர்ந்து வேலை செய்தாக வேண்டும்—அப் பொழுதுதான் நம்மிடையே கணக்குத் தீர்வதாய்க் கொள்ள முடியும்!'' என்கிருர். ஆறு மணி நேர உழைப்பு மட்டுமே செலவாகும் உழைப்புப் பொருளுக்காக, பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்வதாய் வாக்களித்துத் தொழிலாளி ''மனமுவந்து'' செய்து கொண்ட ஒப்பந்தத்தை, இவ்விதம் அவர் நிறைவேற்ற வேண்டியதாகிறது.

வேலைவீதக் கூலியாய் இருப்பினும் இம்மாதிரிதான் ஆகிறது. பன்னிரண்டு மணிநேரத்தில் நமது தொழிலாளி ஒரு பண்டத்தில் பன்னிரண்டு உருப்படிகளைச் செய்வதாய் வைத்துக்கொள்வோம். மூலப்பொருள்களிலும் தேய்மானத் திலும் உருப்படி ஒவ்வொன்றுக்கும் இரண்டு மார்க் ஆவ

தாகவும், உருப்படி ஒவ்வொன்றும் இரண்டரை மார்க்குக்கு விற்கப்படுவதாகவும் கொள்வோம். முன்பு போல அதே அனுமானங்களின் அடிப்படையில், முதலாளி உருப்படி ஒன்றுக்கு இருபத்தைந்து ஃபெனிக் வீதம் தொழிலாளிக்கு ஊதியமளிப்பார். எனவே, பன்னிரண்டு உருப்படிகளுக்கு மூன்று மார்க் தருவார்; இதைச் சம்பாதிக்கத் தொழிலாளிக்குப் பன்னிரண்டு மணி நேரம் ஆகிறது. இந்தப் பன்னிரண்டு உருப்படிகளை விற்று முதலாளி முப்பது மார்க் பெறுகிறார். மூலப் பொருள்களுக்காகவும் தேய்மானத்துக்காகவும் இருபத்து நான்கு மார்க்கைக் கழிக்க வேண்டும். எஞ்சும் ஆறு மார்க்கிலிருந்து அவர் மூன்று மார்க்கைத் தொழிலாளிக்குக் கூலியாய்த் தருகிறார், மூன்று மார்க்கைத் தாம் எடுத்துக் கொண்டுவிடுகிறார். முன்பு போல அதே மாதிரி முடிவையே வந்தடைகிறோம். இப்பொழுதும் தொழிலாளி ஆறு மணி நேரம் தமக்காக, அதாவது தமது கூலியைத் திருப்பித் தருவதற்காக (அந்தப் பன்னிரண்டு மணிகளில் ஒவ்வொன்றிலும் அரை மணி வீதம்) வேலை செய்கிறார்; ஆறு மணி நேரம் முதலாளிக்காக வேலை செய்கிறார்.

மிகச் சிறந்த பொருளியலாளர்களும், அவர்கள் ''உழைப்பின்'' மதிப்பிலிருந்து தொடங்கிய வரை, இடருக்கு உள்ளாகித் தோல்வியுற வேண்டியதாகிவிட்ட அந்தச் சிக்கல், ''உழைப்பின்'' மதிப்புக்குப் பதிலாய் ''உழைப்பு சக்தியின்'' மதிப்பிலிருந்து தொடங்குவோமாயின் மறைந்தொழிந்து விடுகிறது. நமது இன்றைய முதலாளித்துவச் சமுதாயத்தில் உழைப்பு சக்தியானது ஒரு பரிவர்த்தனைப் பண்டமாய் இருந்து வருகிறது. வேறு எந்தப் பரிவர்த்தனைப் பண்டத்தையும் போன்றதே ஆயினும், இது ஒரு தனிக் குணாதிசயம் பெற்ற பரிவர்த்தனைப் பண்டமாய் இருக்கிறது. அதாவது இது மதிப்பைத் தோற்றுவிக்கும், மதிப்பின் தோற்றுவாயாய் இருக்கும் தனிக் குணாதிசயம் கொண்டதாகும். உண்மையில் இது, தக்கப்படி உபயோகிக்கப்படும் பட்சத்தில், தன்னிடம் இருப்பதைக் காட்டிலும் கூடுதலான மதிப்பின் தோற்றுவாயாகி விடும் தனிக் குணாதிசயம் கொண்டதாகும். பொருளுற்பத்தியின் தற்போதைய நிலையில் மனித உழைப்பு சக்தியானது ஒரு நாளில், தன்னிடம் இருப்பதையும் தனக்காகச் செலவாவதையும்விட அதிகமான மதிப்பை உற்பத்தி செய்கிறது

என்பது மட்டுமல்ல; ஒவ்வொரு புதிய விஞ்ஞானக் கண்டு பிடிப்பையும் தொடர்ந்து, ஒவ்வொரு புதிய தொழில் நுட்பச் சாதனையையும் தொடர்ந்து, அதன் அன்றாடச் செலவுக்கு அதிகமாய் அது அன்றாடம் உற்பத்தி செய்யும் இந்த உபரிப் பொருளானது அதிகரித்துச் செல்கிறது; ஆகவே தொழிலாளி தமது நாட் கூலியைத் திருப்பித் தருவதற்காக வேலை செய்யும் வேலை நேரப் பகுதி குறைந்து செல்கிறது; இதன் விளைவாய், மறு புறத்தில், ஊதியம் எதுவுமின்றி முதலாளிக்கு அவர் தமது உழைப்பைத் தானமாய் வழங்க வேண்டியுள்ள வேலை நேரப் பகுதி அதிகரித்துச் செல் கிறது.

நமது இன்றையச் சமுதாயம் அனைத்தின் பொருளாதாரக் கட்டமைப்பு இத்தகையதே: தொழிலாளி வர்க்கம் தான் எல்லா மதிப்புகளையும் உற்பத்தி செய்கிறது. ஏனெனில் மதிப்பு என்பது உழைப்பைக் குறிக்கும் மற்றொரு பெயரே ஆகும். நமது இன்றைய முதலாளித்துவச் சமுதாயத்தில் குறிப்பிட்ட ஒரு பரிவர்த்தனைப் பண்டத்தில் உள்ளடங்கிய சமூக வழியில் அவசியமான உழைப்பின் அளவைக் குறிப்பிட்டுக் காட்டும் பெயரே ஆகும். ஆனால் தொழிலாளர்களால் உற்பத்திசெய்யப் படும் இந்த மதிப்புகள் தொழிலாளர்களுக்குச் சொந்தமாய் இருக்கவில்லை. மூலப் பொருள்கள், இயந்திரங்கள், கருவிகள், காப்பு நிதிகள் ஆகியவற்றின் உடைமையாளர்களுக்கு, தொழிலாளி வர்க்கத்தின் உழைப்பு சக்தியை விலைக்கு வாங்குவதற்கு எவை வகை செய்கின்றனவோ அவற்றின் உடைமையாளர்களுக்கு அவை சொந்தமாய் இருக்கின்றன. ஆகவே தொழிலாளி வர்க்கம் தான் உற்பத்தி செய்யும் திரள் திரளான பொருள்களிலிருந்து ஒரு பகுதியை மட்டுமே திருப்பிப் பெறுகிறது. எஞ்சிய பகுதியை முதலாளித்துவ வர்க்கம் தன்னிடமே வைத்துக் கொண்டு விடுகிறது, அதிகம் போனால் நிலச்சுவான்களது வர்க்கத்துடன் பங்கிட்டுக் கொள் கிறது; இந்த எஞ்சிய பகுதி, மேலே நாம் கண்ணுற்றது போல ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பையும் சாதனையையும் தொடர்ந்து மேலும் மேலும் பெரிதாகிச் செல்கிறது. ஆனால் தொழிலாளி வர்க்கத்துக்குக் கிடைக்கும் பங்கானது (நபர் விகித அளவில் கணக்கிடுகையில்) மிக மெதுவாகவும், குறிப் பிடத்தக்கதாய் இல்லாத அளவிலும்தான் அதிகரிக்கிறது,

அல்லது அதிகரிக்காமலும் இருக்கிறது, சிற்சில நிலைமைகளில் குறையவுங்கூட செய்கிறது.

ஆனால் மேலும்மேலும் கூடுதலான வேகத்தில் ஒன்றுக்குப் பதில் ஒன்றாய் வந்து கொண்டிருக்கும் இந்தக் கண்டுபிடிப்புகளும் சாதனைகளும், இதன்முன் கண்டும் கேட்டுமிராத அளவுக்கு நாளுக்கு நாள் உயர்ந்து செல்லும் இந்த மனித உழைப்பின் உற்பத்தித் திறன், இறுதியில் ஒரு மோதலை உண்டாக்குகிறது; இன்றைய முதலாளித்துவப் பொருளாதாரம் மடிந்தொழியப் போகும் ஒரு மோதலை உண்டாக்குகிறது. ஒரு புறத்தில் அளவிட முடியாத செல்வங்களும், வாங்குவோரால் சமாளிக்க முடியாதபடி அபரிமிதமாய் அளவு கடந்துவிட்ட பொருள்களும் குவிய, மறு புறத்தில் சமுதாயத்தின் மிகப் பெரும் பகுதியோர் பாட்டாளிகளாக்கப் பட்டு கூலித் தொழிலாளர்களாய் மாற்றப்படுகின்றனர், இக்காரணத்தால் இந்த அளவு கடந்த அபரிமிதப் பொருள்களைத் தமது உடைமையாக்கிக் கொள்ளும் வகையற்றோராக்கப்படுகின்றனர். அளவுமீறிய செல்வமுடைத்த ஒரு சிறு வர்க்கமாகவும், சொத்தில்லாத கூலித்தொழிலாளர்களது பெரிய வர்க்கமாகவும் சமுதாயம் பிளவுறுவதால், அது மிகப் பெருவாரியான உறுப்பினர்கள் மிகக் கொடிய இல்லாமையிலிருந்து சொற்ப அளவுக்கே காப்பு பெற, அல்லது சிறிதும் காப்பில்லாதோராய் இருக்க, தனது அளவு கடந்த அபரிமிதத்தாலேயே நெரித்துத் திணறடிக்கப்படும் ஒரு சமுதாயமாகிவிடுகிறது. இப்படிப்பட்ட நிலை நாள்தோறும் மேலும் மேலும் அபத்தமாகியும் அதேபோதில் மேலும் மேலும் தேவையற்றதாகியும் வருகிறது. இந்த நிலை ஒழிக்கப்பட்டு ஆக வேண்டும், இது ஒழிக்கப்படவும் முடியும். தற்போதுள்ள வர்க்க வேறுபாடுகள் மறைந்துபோய்—ஓரளவு நலக்குறைவு ஏற்படுவதாயினும் எப்படியும் தார்மிகத் துறையில் மிகவும் மதிப்புடையதான ஒரு குறுகிய இடைக் காலப் பகுதிக்குப் பிற்பாடு—சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களிடமும் ஏற்கனவே இருக்கும் பிரம்மாண்ட உற்பத்தி சக்திகளைத் திட்டமிட்ட முறையில் பயன்படுத்துவதன் மூலமும், மேலும் விரிவாக்கிச் செல்வதன் மூலமும், வேலை செய்வது எல்லோருக்கும் உரிய கடமையாவதன் மூலமும், பிழைப்புக்கான சாதனங்கள், வாழ்வைச் சுவைத்து இன்புறு

வதற்கான சாதனங்கள், உடலுக்கும் உள்ளத்துக்கும் உரித்தான எல்லா ஆற்றல்களின் வளர்ச்சிக்கும் பயன்பாட்டுக்குமான சாதனங்கள், ஒத்த அளவிலும் மேலும் மேலும் கூடுதலான நிறைவுடனும் எல்லோருக்கும் கிடைக்கும்படியான ஒரு புதிய சமூக அமைப்பைப் பெற முடியும். இந்தப் புதிய சமூக அமைப்பை வென்று கொள்ளத் தொழிலாளர்கள் மேன்மேலும் வைராக்கியமுடையோராகி வருகிறுர்கள் என்பது மாகடலின் இரு புறங்களிலும் நாளைக்கு மே முதல் நாளன்றும், மே 3ஆம் நாளான ஞாயிறன்றும்[1] பிரத்யட்சமாய் நிருபித்துக் காட்டப்படும்.

ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ்

லண்டன், 1891 ஏப்ரல் 30

*1891 மே 13ல், Vorwärts,*
*இதழ் 109ன் அனுபந்தமாகவும்,*
*கார்ல் மார்க்ஸ் கூலியுழைப்பும்*
*மூலதனமும் (பெர்லின், 1891)*
*என்னும் பிரசுரத்திலும் வெளிவந்தது*

---

[1] எங்கெல்ஸ் இங்கு குறிப்பிடுவது 1891ல் நடைபெற்ற மே தினக் கொண்டாட்டம். சில நாடுகளில் (பிரிட்டனிலும் ஜெர்மனியிலும்) மே முதல் நாளைத் தொடர்ந்து வரும் முதலாவது ஞாயிற்றுக் கிழமையன்று மே தினம் கொண்டாடப்பட்டு வந்தது. 1891ல் இந்த முதலாவது ஞாயிறு மே 3ல் வந்தது.—*[பதிப்பாசிரியர்.]*

# கூலியுழைப்பும் மூலதனமும்

## 1

தற்போது நடைபெறும் வர்க்கப் போராட்டங்களுக்கும் தேசியப் போராட்டங்களுக்கும் பொருளாயத அடிப்படையாய் இருக்கும் பொருளாதார உறவுகளை நாம் எடுத்துரைக்கவில்லை என்பதாய்ப் பல்வேறு தரப்புகளிலிருந்தும் நம்மைப் பற்றி குறை கூறியுள்ளனர். வேண்டுமென்றேதான் நாம் இந்த உறவுகளை, நேரடியாய் இவை அரசியல் மோதல்களில் வலிய முன்னிலைக்கு வந்தபோது மட்டும், சுருக்கமாய்க் குறிப்பிட்டுக் காட்டி வந்திருக்கின்றோம்.

யாவற்றிலும் தலையாய விவகாரமாய் இருந்தது எதுவெனில், நடப்பு வரலாற்றில் வர்க்கப் போராட்டத்தின் தடங்களை விவரித்துக் காட்டுவதுதான்; பிப்ரவரியின் விளைவாகவும் மார்ச்சின் விளைவாகவும்[1] தொழிலாளி வர்க்கம் அடக்கிக் கீழ்ப்படுத்தப்பட்ட அதே நேரத்தில் அதன் எதிராளிகளும்—அதாவது பிரான்சில் முதலாளித்துவக் குடியரசுவாதிகளும் ஐரோப்பா கண்டம் பூராவிலும் பிரபுத்துவ எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடிய முதலாளித்துவ, விவசாயி வர்க்கங்களும்—தோற்கடிக்கப்பட்டனர் என்பதையும், பிரான்சில் ''நேர்மையான குடியரசு'' பெற்ற வெற்றியானது பிப்ரவரிப் புரட்சியின் சங்கநாதத்தைக் கேட்டுச் சுதந்திரப் போர்கள் துவக்கிய தேசங்களுடைய வீழ்ச்சியையும் அதேபோது குறித்தது என்பதையும், முடிவில் புரட்சிகரத் தொழிலாளர்களுடைய தோல்வியைத் தொடர்ந்து ஐரோப்பாவானது மீண்டும் அதன் பழைய இரட்டை

[1] *1848 பிப்ரவரி 23-24ல் பாரிசிலும், மார்ச் 13ல் வியன்னாவிலும், மார்ச் 18ல் பெர்லினிலும் நடைபெற்ற புரட்சிகள் இங்கு குறிப்பிடப்படுகின்றன.—[பதிப்பாசிரியர்.]*

அடிமை நிலையாகிய ஆங்கிலோ-ருஷ்ய அடிமை நிலைக்குச் சரிந்து விட்டது என்பதையும் நாம் ஏற்கனவே கைவசம் இருந்த வரலாற்று விவரப் பொருள்களைக் கொண்டும், மற்றும் அன்றாடம் புதிதாய் உருவாக்கப்படுகிறவற்றைக் கொண்டும் அனுபவவாத வழியில் நிரூபித்துக் காட்டுவது தான். பாரிசில் ஜூன் போராட்டம், வியன்னாவின் வீழ்ச்சி, 1848 நவம்பரில் பெர்லினது சோகக்கூத்து, போலந்தும் இத்தாலியும் ஹங்கேரியும் மேற்கொண்ட கடைசிக் கடும் பிரயத்தனங்கள், பட்டினி போடப் பட்டு ஐயர்லாந்து பணிய வைக்கப்பட்டது—இவைதாம் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் தொழிலாளி வர்க்கத்துக் கும் நடைபெற்ற ஐரோப்பிய வர்க்கப் போராட்டத்தைக் குண நிர்ணயம் செய்து காட்டிய பிரதான காரணக் கூறுகள்; இவற்றைக் கொண்டுதான் நாம் புரட்சிக் கொந்தளிப்பு ஒவ்வொன்றும், எவ்வளவுதான் அதன் குறிக்கோள் வர்க்கப் போராட்டத்திலிருந்து தூர விலகி இருப்பதாய்த் தோன்றிய போதிலும், புரட்சிகரத் தொழிலாளி வர்க்கம் வெற்றிவாகை சூடாத வரை தோல்வியுறவே செய்யுமென்றும், சமூகச் சீர்திருத்தம் ஒவ்வொன்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சி யும் பிரபுத்துவ எதிர்ப்புரட்சியும் உலகப் போர் ஒன்றில் பலப் பரிட்சை நடத்தாத வரை பகற் கனவாகவே இருக்கு மென்றும் நிரூபித்துக் காட்டினோம். எதார்த்த உண்மையில் இருந்தது போலவே நம்முடைய விளக்கத்திலும் பெல்ஜிய மும் சுவிட்ஜர்லாந்தும் மாபெரும் வரலாற்றுப் படக் காட்சி யில் சோகமும் சிரிப்புமாய்க் கேலிச் சித்திரப் பாணியிலான படப் பிடிப்புகளாய் அமைந்தன. ஒன்று முதலாளித்துவ முடி யரசுக்கு முன்மாதிரி அரசாகவும், மற்றொன்று முதலாளித் துவக் குடியரசுக்கு முன்மாதிரி அரசாகவும் இருக்கும் இவை, ஐரோப்பியப் புரட்சியிலிருந்தும் அதே போல வர்க்கப் போராட்டத்திலிருந்தும் சுயேச்சையாய் இருந்து வரும் அரசுகளாய்த் தம்மைக் கற்பனை செய்து கொள்கின்றன.

வர்க்கப் போராட்டமானது 1848ஆம் ஆண்டின் பிரம் மாண்ட அரசியல் வடிவங்களில் வளர்ச்சியுற்றதை நமது வாசகர்கள் கண்ணுற்றுள்ளதால், இனி பொருளாதார உறவுகளை, முதலாளித்துவ வர்க்கத்துக்கும் அதன் வர்க்க ஆட்சிக்கும் மற்றும் தொழிலாளர்களுடைய அடிமை

நிலைக்கும் ஆதாரமாய் இருக்கும் இந்த உறவுகளை மேலும் நெருங்கிச்சென்று பரிசிலிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

மூன்று பெரும் பிரிவுகளில் நாம் எடுத்துரைக்கின்றோம்: 1) கூலி உழைப்புக்கும் மூலதனத்துக்குமுள்ள உறவு, தொழிலாளியின் அடிமை நிலையும் முதலாளியின் ஆதிக்கமும்; 2) நடுத்தர முதலாளித்துவ வர்க்கங்களும் தற்போதுள்ள அமைப்பில் விவசாயிக் குலத்தோர் எனப்படுவோரும் தவிர்க்க முடியாதபடி அழிவுறுதல்; 3) உலகச் சந்தையின் கொடுங்கோலனாய்க் கோலோச்சும் இங்கிலாந்தினால் பல்வேறு ஐரோப்பிய தேசங்களின் முதலாளித்துவ வர்க்கங்களும் வாணிப முறையில் கீழ்ப்படுத்தப்படுதலும் சுரண்டப்படுதலும்.

எமது கருத்துக்களைக் கூடுமான வரை எளிதாகவும் மிகப் பலரும் படிக்கத்தக்க விதத்திலும் எடுத்துரைக்க முயற்சி செய்வோம்; அரசியல் பொருளாதார அரிச்சுவடிப் பாடத்துக்குரிய கருத்துக்களுங்கூட தெரிந்திருப்பதாய்க் கொள்ளாமல் எடுத்துரைப்போம். தொழிலாளர்கள் படித்துப் புரிந்து கொள்ள வேண்டுமென்பதே எமது விருப்பம். தவிரவும் ஜெர்மனியில் மிக எளிய பொருளாதார உறவுகள் குறித்தும் மிகவும் குறிப்பிடத்தக்க அளவுக்கு அறியாமையும் கருத்துக் குழப்படியும் நிலவுகின்றன — நடப்பு நிலைவரங்களின் காவலர்களாய் அங்கீகாரம் பெற்றவர்கள் முதல், சின்னாபின்னமாய்ப் பிளவுண்ட ஜெர்மனியில் ஆட்சி புரியும் முடியரசர்களையும்விட மிகுதியாய் இருந்து வரும் சோஷலிசச் செப்படி வித்தைக்காரர்கள், அங்கீகாரமில்லா அரசியல் மேதாவிகள் வரையிலாய், எல்லோரிடத்தும் நிலவுகின்றன.

ஆகவே, இப்பொழுது முதலாவது கேள்வியை எடுத்துக் கொள்கிறோம்: கூலி என்பது என்ன? அது நிர்ணயிக்கப்படுவது எப்படி?

தொழிலாளர்களிடம் ''உங்களுக்குக் கிடைக்கும் கூலி எவ்வளவு?'' என்று கேட்டால், ''என்னுடைய முதலாளியிடமிருந்து எனக்கு நாள் ஒன்றுக்கு ஒரு மார்க் கிடைக்கிறது'' என்பார் ஒருவர்; ''எனக்கு இரண்டு மார்க் கிடைக்கிறது'' என்பார் வேறொருவர்; இப்படிப் பலரும் பல விதமாய்ப் பதில் கூறுவர். அவரவரும் ஈடுபட்டிருக்கும் வெவ்வேறு தொழில்களுக்கு ஏற்ப, வெவ்வேறு தொகைகளைக் குறிப்

பிடுவர்; குறிப்பிட்ட அளவு வேலையைச் செய்வதற்காக—உதாரணமாய், ஒரு கஜம் துணி நெய்வதற்காக, அல்லது ஓர் அச்சுப் படிவத்துக்கு வேண்டிய அச்சுகளைக் கோப்பதற்காக—தத்தமது முதலாளிகளிடமிருந்து இத்தொகைகளைப் பெறுவதாய்ச் சொல்வர். பதில்கள் பல விதமாய் இருப்பினும், ஒரு விஷயம் குறித்து இவர்கள் எல்லோருமே ஒத்துக் கொள்வார்கள்: குறிப்பிட்ட உழைப்பு நேரத்துக்காக, அல்லது உழைப்பால் உற்பத்தி செய்யப்படும் குறிப்பிட்ட அளவு பண்டத்துக்காக, முதலாளி அளிக்கும் பணத் தொகையே கூலி எனப்படுவது.

எனவே முதலாளி பணம் கொடுத்து இவர்களுடைய உழைப்பை வாங்குவதாய்த் தெரிகிறது. பணத்துக்காக இவர்கள் தம்து உழைப்பை விற்கின்றனர். ஆனால் இது வெளித் தோற்றமே அன்றி உண்மையல்ல. உண்மையில் நடப்பது என்னவெனில், பணத்துக்காக இவர்கள் முதலாளியிடம் தமது உழைப்பு சக்தியை விற்கின்றனர். ஒரு நாள், வாரம், மாதம் இப்படி ஒரு கால அளவுக்கு இந்த உழைப்பு சக்தியை முதலாளி விலைக்கு வாங்குகிறார். இப்படி அதை விலைக்கு வாங்கிய பிறகு, வரையறுக்கப்பட்ட நேரத்துக்குத் தொழிலாளர்களை வேலை செய்ய வைப்பதன் மூலம் அவர் அதை உபயோகித்துக் கொள்கிறார். இவர்களுடைய உழைப்பு சக்தியை முதலாளி எவ்வளவு தொகை கொடுத்து வாங்கினரோ அதே தொகைக்கு—உதாரணமாய் இரண்டு மார்க்குக்கு—அவர் இரண்டு இராத்தல் சர்க்கரை வாங்கியிருக்கலாம், அல்லது வேறு எந்த ஒரு பரிவர்த்தனைப் பண்டத்திலும் குறிப்பிட்ட ஓர் அளவை வாங்கியிருக்கலாம். இரண்டு இராத்தல் சர்க்கரை வாங்குவதற்காக அவ்ர் கொடுத்த இரண்டு மார்க் இரண்டு இராத்தல் சர்க்கரைக்குரிய விலை ஆகும். பன்னிரண்டு மணி நேர உபயோகத்துக்காக உழைப்பு சக்தியை வாங்க அவர் கொடுத்த இரண்டு மார்க்குதான் பன்னிரண்டு மணிநேர உழைப்புக்குரிய விலை ஆகும். ஆக, உழைப்பு சக்தியும் சர்க்கரையைப் போன்ற ஒரு பரிவர்த்தனைப் பண்டம் தான். முன்னது கடிகாரத்தைக் கொண்டு அளக்கப்படுகிறது, பின்னது துலாக்கோலைக் கொண்டு அளக்கப்படுகிறது.

தொழிலாளர்கள் தம்மிடமுள்ள பண்டமாகிய உழைப்பு சக்தியை முதலாளியிடமுள்ள பண்டமாகிய பணத்துக்காகப்

பரிவர்த்தனை செய்து கொள்கின்றனர். இந்தப் பரிவர்த்தனை குறிப்பிட்ட ஒரு விகிதத்தில் நடந்தேறுகிறது. இவ்வளவு நேரம் உழைப்பு சக்தியை உபயோகித்துக் கொள்வதற்காக இவ்வளவு பணம். பன்னிரண்டு மணி நேர நெசவுக்காக இரண்டு மார்க். இரண்டு மார்க் என்பது, இரண்டு மார்க்குக்கு நான் வாங்கக் கூடிய ஏனைய எல்லாப் பண்டங்களையும் குறிப்பிடுகிறது அல்லவா? ஆகவே, உண்மையில் தொழிலாளி தமது பண்டமாகிய உழைப்பு சக்தியை எல்லா வகையான பிற பண்டங்களுக்காகப் பரிவர்த்தனை செய்து கொள்கிறார், குறிப்பிட்ட ஒரு விகிதத்தில் பரிவர்த்தனை செய்து கொள்கிறார். முதலாளி அவருக்கு இரண்டு மார்க் கொடுத்ததன் மூலம், அவருடைய ஒரு நாள் உழைப்புக்குப் பரிவர்த்தனையாக இந்த அளவு இறைச்சியும், இந்த அளவு துணிமணியும், இந்த அளவு எரிபொருளும், விளக்கு வெளிச்சமும், இன்ன பிறவும் தந்துள்ளார். எனவே இரண்டு மார்க் என்பது பிற பண்டங்களுக்காக உழைப்பு சக்தி பரிவர்த்தனை செய்து கொள்ளப்படும் விகிதத்தைக் குறிக்கிறது, அதாவது தொழிலாளியினுடைய உழைப்பு சக்தியின் பரிவர்த்தனை மதிப்பைக் குறிக்கிறது. ஒரு பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பைப் பணமாய்க் கணித்துக் கூறுவோமாயின், அதுதான் அப்பண்டத்தின் விலை எனப்படுவது. கூலி என்பது உழைப்பு சக்தியின் விலையைக் குறிக்கும் ஒரு தனிப் பெயரேதான்; சாதாரணமாய் இது உழைப்பின் விலை என்று அழைக்கப்படுகிறது; மனித ஊனையும் இரத்தத்தையும் தவிர வேறு இருப்பிடம் இல்லாத இந்த விசேஷ வகைப் பண்டத்துக்குரிய விலைதான் இது.

யாராவது ஒரு தொழிலாளியை எடுத்துக் கொள்வோம், உதாரணமாய் ஒரு நெசவாளியை எடுத்துக் கொள்வோம். முதலாளி இந்த நெசவாளிக்குத் தறியும் நூலும் தருகிறார். இவற்றை வைத்துக் கொண்டு நெசவாளி வேலை செய்கிறார், நூல் துணியாய் மாற்றப்படுகிறது. முதலாளி இந்தத் துணியின் உடைமையாளராகி அதை விற்கின்றார், இருபது மார்க்குக்கு விற்பதாய் வைத்துக் கொள்வோம். நெசவாளிக்குக் கிடைக்கும் கூலியானது துணியில், இந்த இருபது மார்க்கில், அவருடைய உழைப்பின் உற்பத்திப் பொருளில் ஒரு பங்கையா குறிக்கிறது? இல்லவே இல்லை. துணி விற்பனை செய்யப்படுவதற்கு நெடுங் காலத்துக்கு முன்பே, ஏன் அது நெய்து

முடிக்கப்படுவதற்கு நெடுங்காலத்துக்கு முன்பே, நெசவாளி தமது கூலியைப் பெற்றுக் கொண்டுவிடுகிறார். ஆகவே முதலாளி இந்தத் துணியிலிருந்து தாம் பெறப் போகும் பணத்தைக் கொண்டு இந்தக் கூலியைத் தரவில்லை, ஏற்கனவே தம் கையிருப்பிலுள்ள பணத்தைக் கொண்டுதான் தருகிறார். எப்படி தறியும் நூலும் முதலாளியால் நெசவாளிக்குத் தரப் பட்டவையே தவிர, நெசவாளி உற்பத்தி செய்த பொருள்கள் அல்லவோ, அதே போல தமது பண்டமாகிய உழைப்பு சக்திக்குப் பரிவர்த்தனையாய் நெசவாளி பெற்றுக் கொள்ளும் பண்டங்களும் அவர் உற்பத்தி செய்த பொருள்கள் அல்ல. அவருடைய முதலாளியின் துணியை வாங்குவோர் யாரும் இல்லாமற் போய், அதை விற்க முடியாமற் போகக் கூடும். இந்தத் துணியின் விற்பனையிலிருந்து கூலியின் தொகையுங் கூட முதலாளிக்குக் கிடைக்காமல் போய்விடலாம். நெச வாளியின் கூலியுடன் ஒப்பிடுகையில் மிகவும் லாபகரமாய் முதலாளி இந்தத் துணியை விற்பனை செய்வதும் சாத்தியமே. இவற்றுடன் எல்லாம் நெசவாளிக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை. முதலாளி தம்மிடமுள்ள செல்வத்தில், அதாவது தமது மூலதனத்தில், ஒரு பகுதியைக் கொண்டு நெச வாளியின் உழைப்பு சக்தியை விலைக்கு வாங்குகிறார்; மூலப் பொருளாகிய நூலையும் உழைப்புக் கருவியாகிய தறியையும் எப்படி அவர் தமது செல்வத்தில் பிறிதொரு பகுதியைக் கொண்டு வாங்கியுள்ளாரோ அதே போல நெசவாளியின் உழைப்பு சக்தியையும் வாங்குகிறார். இப்படி இவை யாவற் றையும் அவர் வாங்கிய பிற்பாடு—அவர் வாங்கியவற்றுள் துணியை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பு சக்தியும் அடங்கியிருக்கிறது—தமக்குச் சொந்தமான மூலப் பொருட்களையும் உழைப்புக் கருவிகளையும் கொண்டே அவர் உற்பத்தி செய்கிறார். ஏனெனில் இந்த உழைப்புக் கருவிகளில் இப்பொழுது நமது அருமை நெசவாளியும் ஒரு கருவியாய் உண்மையில் உள்ளடங்கிவிடுகிறார். நெசவுத் தறியைப் போலவே நமது நெசவாளியும் உற்பத்திப் பொருளிலோ, இப்பொருளுக்குக் கிடைக்கும் விலையிலோ பங்கு ஏதும் பெறுவதில்லை.

ஆக, கூலியானது தொழிலாளி உற்பத்தி செய்யும் பண்டத்தில் தொழிலாளிக்குரிய பங்கு அல்ல. ஏற்கனவே இருந்து வரும்

பண்டங்களில் எப்பகுதியைக் கொண்டு முதலாளி உற்பத்தித் திறனுள்ள குறிப்பிட்ட ஓர் அளவு உழைப்பு சக்தியைத் தனக்கு வாங்கிக் கொள்கிறுரோ, அப்பகுதியே கூலியாகும்.

உழைப்பு சக்தி என்பது இவ்விதம் அதன் உடைமையாளராகிய கூலித்தொழிலாளி, மூலதனத்துக்கு விற்பனை செய்யும் ஒரு பரிவர்த்தனைப் பண்டமாகும். ஏன் அவர் இதை விற்பனை செய்கிறுர்? உயிர் வாழ்வதற்காக.

ஆனல் உழைப்பு சக்தியின் பிரயோகம், அதாவது உழைப்பு, தொழிலாளியினுடைய உயிர்ச் செயற்பாடாகும், அவருடைய வாழ்வின் புலப்பாடாகும். தேவையான பிழைப்புச் சாதனங்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு அவர் இந்த உயிர்ச் செயற்பாட்டை வேருெருவருக்கு விற்பனை செய்கின்றுர். இவ்விதம் இந்த உயிர்ச் செயற்பாடு அவருக்குத் தாம் உயிர் வாழ்வதற்கு வகை செய்யும் ஒரு சாதனமாகிவிடுகிறது. உயிர் வாழும் பொருட்டு அவர் வேலை செய்கிறுர். உழைப்பை அவர் தமது வாழ்வின் ஒரு பகுதியாகக்கூட கருதுவதில்லை, வாழ்வின் தியாகமாகவே கொள்ள வேண்டியிருக்கிறது. வேருெருவருக்குரியதாய் அவர் மாற்றித் தந்துவிட்ட ஒரு பரிவர்த்தனைப் பண்டம் அது. எனவே அவருடைய செயற்பாட்டின் உற்பத்திப் பொருள் அவருடைய செயற்பாட்டின் குறிக்கோளாய் இருக்கவில்லை. அவர் தமக்காக உற்பத்தி செய்து கொள்வது அவர் நெய்யும் பட்டல்ல, சுரங்கத்திலிருந்து அவர் வெட்டியெடுக்கும் தங்கம் அல்ல, அவர் கட்டியெழுப்பும் மாளிகை அல்ல. தமக்கு அவர் உற்பத்தி செய்து கொள்வது கூலிதான், பட்டும் தங்கமும் மாளிகையும் அவருக்குக் குறிப்பிட்ட அளவுள்ள பிழைப்புச் சாதனங்களாய்—உதாரணமாய்ப் பருத்தி ஆடையும் சில செப்புக் காசுகளும் நிலவறையில் ஓர் உறைவிடமுமாய்—குறுகித் தேய்ந்துவிடுகின்றன. பன்னிரண்டு மணி நேரத்துக்கு நெய்தோ, நூற்றோ, துளைத்தோ, கடைந்தோ, கட்டிடம் கட்டியோ, மண் வெட்டியோ, கல் உடைத்தோ, சுமை தூக்கியோ, வேறு வேலை செய்தோ வரும் தொழிலாளி—தமது இந்தப் பன்னிரண்டு மணி நேர நெசவு, நூற்பு, துளைப்பு, கடைசல், கட்டுமான, மண் வெட்டு அல்லது கல் உடைப்பு வேலையைத் தமது வாழ்வின் புலப்பாடாகவா, தமது வாழ்வாகவா கருதுகிறுர்? இல்லை, மாருக இந்தச் செயற்பாடு முடிவுற்ற

பிறகுதான் உண்மையில் அவருக்கு வாழ்வு ஆரம்பமாகிறது; சாப்பாட்டு மேஜையில், மது விடுதியில், படுக்கையில் ஆரம்பமாகிறது. இந்தப் பன்னிரண்டு மணி நேர உழைப்பானது நெசவு, நூற்பு, துளைப்பு முதலான வேலைகளின் வடிவில் அவருக்குச் சிறிதும் அர்த்தமற்றவையேதான்; சாப்பாட்டு மேஜைக்கு, மது விடுதிக்கு, படுக்கைக்கு அவரை அழைத்துச் செல்லும் ஊதியம் என்ற முறையில்தான் இந்த உழைப்பு அவருக்கு அர்த்தமுடையதாகிறது. பட்டுப் புழுவானது ஒரு புழுவாய்த் தொடர்ந்து ஜீவிக்கும் பொருட்டு நூற்றுக் கொண்டிருக்குமாயின், முழுக்க முழுக்க அது ஒரு கூலித் தொழிலாளி ஆகிவிடும். உழைப்பு சக்தி எப்பொழுதுமே இப்படி ஒரு பரிவர்த்தனைப் பண்டமாய் இருந்து வரவில்லை. உழைப்பு எப்பொழுதுமே கூலியுழைப்பாய், அதாவது சுதந்திர உழைப்பாய் இருந்து வரவில்லை. அடிமை தனது உழைப்பு சக்தியை அடிமையுடைமையாளரிடம் விற்கவில்லை—காளை மாடு தனது ஊழியத்தை எப்படி விவசாயிக்கு விற்பதில்லையோ அதே போல. அடிமை, அவனுடைய உழைப்பு சக்தியும் அடங்கலாய், அடிமையுடைமையாளனுக்கு என்றென்றுக்குமாய் விற்கப்பட்டுவிட்டவன். அவன் ஒரு உடைமையாளனிடமிருந்து இன்னொருவனுக்குக் கை மாறிச் செல்லக் கூடிய ஒரு பரிவர்த்தனைப் பண்டம். அவனே ஒரு பரிவர்த்தனைப் பண்டமானவன், ஆகவே அவனுடைய உழைப்பு சக்தி அவனுடைய பரிவர்த்தனைப் பண்டமாய் இல்லை. பண்ணையடிமை தனது உழைப்பு சக்தியில் ஒரு பகுதியை மட்டுமே விற்பனை செய்கிறான். நிலத்தின் உடைமையாளனிடமிருந்து அவன் கூலி பெறுவதில்லை; நிலத்தின் உடைமையாளன்தான் அவனிடமிருந்து கப்பம் பெறுவதாய்ச் சொல்ல வேண்டும்.

பண்ணையடிமை நிலத்துடன் இணைந்திருப்பவன்; இந்த நிலத்தில் விளையும் பொருள்களை அவன் இந்நிலத்தின் உடைமையாளனிடம் ஒப்படைத்துவிடுகிறான். சுதந்திர உழைப்பாளி இவ்வாறன்றி, தன்னை விற்பனை செய்து கொள்கிறான்; ஆம், சிறுகச் சிறுக விற்பனை செய்து கொள்கிறான். நாள் தோறும் தன் வாழ்வில் எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினைந்து மணி நேரத்தை அதிக விலை தருகிறவனுக்கு, மூலப் பொருள்களுக்கும் உழைப்புக் கருவிகளுக்கும் பிழைப்புச்

சாதனங்களுக்கும் உடைமையாளனுய் இருப்பவனுக்கு, அதாவது முதலாளிக்கு விற்பனே செய்துகொள்கிருன். தொழிலாளி எந்த ஒரு உடைமையாளருக்கோ, நிலத்துக்கோ உரித்தாகிவிடுவதில்லே; ஆனுல் தொழிலாளியின் அன்ருட வாழ்வில் எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினேந்து மணி நேரம் அதை விலே கொடுத்து வாங்குகிறவருக்கு உரித்தாகிவிடுகின்றது. தொழிலாளி தாம் வேலே செய்து வரும் முதலாளியிடமிருந்து தாம் விரும்பும்போது விலகி வந்துவிடலாம். முதலாளியும் தாம் நினேக்கும்போது தொழிலாளியை வேலேயிலிருந்து நீக்கிவிடலாம்; தொழிலாளியிடமிருந்து அவருக்கு லாபம் கிடைக்காமற் போனதும், அல்லது எதிர்பார்க்கப்படும் அளவுக்கு லாபம் கிடைக்காமற் போனதும் அவர் தொழிலாளியை வேலேயிலிருந்து நீக்கிவிடுகிருர். ஆனுல் தமது உழைப்பு சக்தியை விற்பனே செய்வதே பிழைப்புக்கான ஒரே ஆதாரமாய்க் கொண்டிருக்கும் தொழிலாளியால், தமது பிழைப்பைத் துறந்து கொண்டுவிடாமல், வாங்குவோரின் முழு வர்க்கத்திடமிருந்தும், அதாவது முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து விலகி வந்து விட முடியாது. தொழிலாளி உரித்தாகியிருப்பது முதலாளித்துவ வர்க்கத்துக்கே அல்லாது இந்த அல்லது அந்த முதலாளிக்கல்ல. தம்மை விற்பனே செய்து கொள்வதுதான், அதாவது இந்த முதலாளித்துவ வர்க்கத்தினுள் வாங்குவோர் ஒருவரைத் தேடிக் கொள்வதுதான் தொழிலாளிக்குரிய செயலாகும்.

இனி, மூலதனத்துக்கும் கூலியுழைப்புக்குமுள்ள உறவை மேலும் நெருங்கிச் சென்று ஆராயுமுன், கூலியை நிர்ணயிக்கும் மிகவும் பொதுப்படையான உறவுகளேச் சுருக்கமாய் எடுத்துரைப்போம்.

கூலியானது மேலே நாம் கண்டது போல குறிப்பிட்ட ஒரு பரிவர்த்தனேப் பண்டத்தின், அதாவது உழைப்பு சக்தியின் விலே ஆகும். ஆகவே ஏனேய ஒவ்வொரு பரிவர்த்தனேப் பண்டத்தின் விலேயையும் நிர்ணயிக்கும் அதே விதிகளால் தான் கூலியும் நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, ஒரு பரிவர்த்தனேப் பண்டத்தின் விலே நிர்ணயிக்கப்படுவது எப்படி என்பதே இங்குள்ள கேள்வி.

## 2

எதைக் கொண்டு ஒரு பரிவர்த்தனைப் பண்டத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது?

வாங்குவோருக்கும் விற்போருக்கும் இடையிலான போட்டியைக் கொண்டு; கேட்புக்கும் சேர்ப்புக்குமுள்ள, தேவைக்கும் அளிப்புக்குமுள்ள உறவைக் கொண்டு. ஒரு பரிவர்த்தனைப் பண்டத்தின் விலையை நிர்ணயம் செய்யும் போட்டியானது மூன்று பக்கங்களைக் கொண்டது.

ஒரே பண்டத்தைப் பற்பல விற்பனையாளர்களும் விற்க முன்வருகின்றனர். பண்டங்களின் தரம் ஒரே மாதிரியாய் இருக்கையில், மிகவும் குறைந்த விலைக்கு விற்க முன்வருகிறவர் நிச்சயமாய் ஏனையோரை களத்திலிருந்து விரட்டியடித்துவிட்டு மிகவும் கூடுதலான அளவில் விற்பனை செய்வார். இவ்விதம் விற்பனையாளர்கள் விற்பனைக்காக, சந்தைக்காகத் தம்மிடையே போட்டியிட்டுக் கொள்கின்றனர். இவர்களில் ஒவ்வொருவரும் விற்க, கூடுமான அளவுக்கு அதிகமாய் விற்க விரும்புகிறார்; முடியுமானால் ஏனைய விற்பனையாளர்களை ஒதுக்கிவிட்டு தாம் மட்டும் விற்க வேண்டுமென்று விரும்புகிறார். எனவே ஒருவர் மற்றவரைவிட குறைவான விலைக்கு விற்கப் பார்க்கிறார். இதன் விளைவாய் விற்பனையாளர்களிடையே போட்டி ஏற்படுகிறது; இந்தப் போட்டி இவர்கள் விற்க முனையும் பண்டங்களின் விலையைத் தாழ்த்துகிறது.

ஆனால் வாங்குவோர் இடையிலும் போட்டி ஏற்படுகிறது; விற்பனைக்கு வரும் பண்டங்களின் விலையை இந்தப் போட்டி உயரும்படிச் செய்கிறது.

முடிவில் வாங்குவோருக்கும் விற்போருக்கும் இடையே போட்டி உண்டாகிறது. முன்னவர்கள் கூடுமான அளவுக்குக் குறைந்த விலைக்கு வாங்கவும், பின்னவர்கள் கூடுமான அளவுக்கு அதிகமான விலைக்கு விற்கவும் விரும்புகிறார்கள். வாங்குவோருக்கும் விற்போருக்கும் இடையிலான இந்தப் போட்டியின் விளைவு, போட்டி போடும் மேற்கூறிய இரு தரப்பினரும் தம்மிடையே கொண்டுள்ள உறவுநிலையைப் பொறுத்திருக்கிறது, அதாவது போட்டி எத்தரப்பாரிடம் வலுவாய் இருக்கிறது, வாங்குவோரின் படைவரிசையிலா, விற்போரின் படைவரிசையிலா என்பதைப் பொறுத்திருக்கிறது. தொழில் துறை

யானது இரண்டு படைவரிசைகளையும் ஒன்றுக்கொன்று எதிராய்க் களம் புகச் செய்கிறது. அதேபோது ஒவ்வொரு படைவரிசையும் தனது அணிகளுக்குள்ளும், தனது படையாட்களுக்கு இடையிலும் போரிட்டுக் கொள்கிறது. எந்தப் படைவரிசையில் படையாட்கள் தம்முள் ஒருவரையொருவர் குறைந்த அளவுக்கு அடித்துக் கொள்கிறார்களோ, அந்தப் படைவரிசைதான் எதிராளியின் வரிசைமீது வெற்றி பெறுகிறது.

சந்தையில் 100 மூடை பருத்தியும், அதேபோது 1,000 மூடை பருத்தியை வாங்க விரும்புவோரும் இருப்பதாய் வைத்துக்கொள்வோம். ஆகவே இந்த உதாரணத்தில் தேவையானது அளிப்பைக் காட்டிலும் பத்து மடங்கு கூடுதலாய் இருக்கிறது. வாங்குவோரிடையே போட்டி மிகவும் பலமாய் இருக்கும்; நூறு மூடையில் ஒவ்வொருவரும் ஒரு மூடையை, முடியுமானால் அவை யாவற்றையுமே, தாம் வாங்கிக் கொண்டுவிட விரும்புகிறார். இந்த உதாரணம் மனம்போன போக்கில் அமைந்த ஒரு கற்பனையல்ல. வாணிப வரலாற்றில் பருத்திப் பயிர் பாழ்பட்டு ஒரு சில முதலாளிகள் கூட்டு சேர்ந்து கொண்டு நூறு மூடைகளையல்ல, உலகில் இருப்பிலுள்ள எல்லாப் பருத்தியையுமே வாங்க முயன்ற காலங்களைக் கண்டிருக்கிறோம். ஆகவே மேற்கூறிய உதாரணத்தில், வாங்க முனையும் ஒருவர் பருத்தி மூடை ஒன்றுக்கு ஒப்பளவில் மிக உயர்ந்த விலை கொடுக்க முன்வந்து ஏனையோரைக் களத்திலிருந்து விரட்டியடிக்க எத்தனிப்பார். பருத்தி விற்பனையாளர்கள் பகைப் படைவரிசையினரிடையே மிகவும் உக்கிரமான போராட்டம் நடைபெறுவதையும், தமது நூறு மூடைகளும் ஒன்று பாக்கியில்லாமல் விற்பனையாவது நிச்சயமாகிவிட்டதையும் காண்கின்றனர். தமது எதிராளிகள் ஒருவரோடொருவர் போட்டி போட்டுப் பருத்தியின் விலையை உயர்த்திச் செல்லும் ஒரு நேரத்தில், தம்மிடையே மோதல் மூண்டு விலை தாழ்த்தப்பட்டுவிடாதவாறு இவர்கள் கருத்துடன் கவனித்துக் கொள்வார்கள். விற்பனையாளர்களின் படை வரிசையில் இவ்விதம் திடுமென அமைதி குடிகொண்டு விடுகிறது. இவர்கள் எல்லோரும் ஒத்த மனத்தினராய் ஒன்றுபட்டு, வாங்குவோரின் எதிரே பரம சாதுக்களைப் போல கைகட்டிக் கொண்டு அமைதியாய் நிற்கின்றனர். ஆவலுடன்

விடாப்பிடியாய் முன்வந்து வாங்க முனேவோர் அளிக்கக்கூடிய விலேகளுக்கும் திட்டவட்டமான வரம்புகள் உள்ளன, இல்லே யேல் விற்பனேயாளர்கள் கோரும் விலேகளுக்கு ஓர் எல்லேயே இருக்காது.

ஆகவே பண்டத்தின் அளிப்பு அதன் தேவையைக் காட்டிலும் குறைவாய் இருக்குமாயின், விற்பனேயாளர்களிடையே சிறிதளவே போட்டி ஏற்படுகிறது, அல்லது போட்டியே இல்லாமலும் போய்விடுகிறது. இந்தப் போட்டி எந்த அளவுக்குக் குறைவாகின்றதோ, அதே அளவுக்கு வாங்குவோரிடையிலான போட்டி அதிகரிக்கின்றது. விளேவு என்னவெனில், பண்ட விலேகள் அதே விகிதத்தில் வெகுவாய் உயர்ந்து விடுகின்றன.

இதற்கு நேர் மாருன விளேவை உண்டாக்கும் நேர் மாருன சந்தர்ப்பம் இதைக் காட்டிலும் அடிக்கடி ஏற்படுகிறது, இதை நன்கு அறிவோம். தேவைக்குக் கூடுதலாய்க் கணிச அளவு உபரியான அளிப்பு; விற்பனேயாளர்களிடையே வெறித்தனமான போட்டா போட்டி; வாங்குவோர் பற்ருக் குறையாய் இருக்கும் நிலே; படுகேவலமான குறைந்த விலேகளில் பண்டங்கள் தீர்த்துக் கட்டப்படுதல்.

ஆனல் விலேகளின் ஏற்றம், வீழ்ச்சி என்பதன் பொருள் என்ன? உயர்ந்த விலே, குறைந்த விலே என்பதன் பொருள் என்ன? மணற் பொடியை உருப்பெருக்காடியில் வைத்துப் பரிசீலித்தால் உயரமாய்த் தெரிகிறது; மலேயுடன் ஒப்பிடுகையில் கோபுரம் உயரத்தில் குறைவாய்த் தோன்றுகிறது. விலேயானது அளிப்புக்கும் தேவைக்குமுள்ள உறவுநிலேயால் நிர்ணயிக்கப்படுகிறது என்ருல், அளிப்புக்கும் தேவைக்குமுள்ள உறவுநிலேயை நிர்ணயிப்பது எது?

நாம் சந்திக்கும் முதலாவது முதலாளியிடம் கேட்டுப் பார்ப்போம். கணப் பொழுதுகூட சிந்திக்காமல் மற்ெருரு மகா அலெக்சாண்டரைப் போல உடனே அவர் இந்த அப்பாலேத் தத்துவ முடிச்சைப் பெருக்கல் வாய்ப்பாட்டைக் கொண்டு வெட்டித் தள்ளிவிடுவார். நான் விற்கும் பண்டங்களே உற்பத்தி செய்ய எனக்கு 100 மார்க் செலவாகியிருந்தால், இந்தப் பண்டங்களே விற்பதன் மூலம் எனக்கு 110 மார்க் கிடைக்கிறதென்ருல்—அந்த ஓராண்டுக்குள் கிடைப்பதாய்க் கொள்கிறேன்—அது நல்ல, நேர்மையான, நியாயமான

லாபம் ஆயிற்றே என்று அவர் நம்மிடம் சொல்வார். ஆனல் இந்தப் பரிவர்த்தனையின் மூலம் 120 அல்லது 130 மார்க் கிடைக்குமாயின் அது உயர்ந்த லாபமாகும்; 200 மார்க்வரை கிடைத்தால் அது அசாதாரணமான, பிரம்மாண்ட லாப மாயிருக்கும். ஆகவே முதலாளிக்கு அவருடைய லாபத்தின் அளவையாய்ப் பயன்படுவது எது? அவருடைய பரிவர்த்தனைப் பண்டத்தின் உற்பத்திச் செலவுதான். இந்தப் பண்டத் துக்குப் பரிவர்த்தனையாய் இதைக் காட்டிலும் குறை வான செலவில் உற்பத்தியான குறிப்பிட்ட அளவுள்ள பிற பண்டங்களை அவர் பெறுவாராயின், நஷ்டமடைந்துவிடுகிருர். தமது பண்டத்துக்குப் பரிவர்த்தனையாய் இதைக் காட்டிலும் அதிகச் செலவில் உற்பத்தியான குறிப்பிட்ட அளவுள்ள பிற பண்டங்களைப் பெறுவாராயின், லாபமடைகின்ருர். அவர் தமது பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பு எந்த அளவுக்குச் சுன்னத்தைக் காட்டிலும்—அதாவது உற்பத்திச் செலவைக் காட்டிலும்—அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கிறது என்பதற்கு ஏற்ப லாபத்தின் ஏற்றத்தையோ வீழ்ச்சியை யோ கணக்கிடுகிருர்.

இவ்விதம் அளிப்புக்கும் தேவைக்குமுள்ள மாறுபடும் உறவுநிலையானது எப்படி ஒரு நேரம் விலை ஏற்றத்தையும் இன்னெரு நேரம் விலை வீழ்ச்சியையும், ஒரு நேரம் உயர்ந்த விலையையும் இன்னெரு நேரம் குறைந்த விலையையும் தோற்றுவிக்கிறது என்பதைக் காண்கிறேம். போதுமான அளிப்பு இல்லாததாலோ, தேவை அளவு மீறி அதிகரித்து விட்டதாலோ ஒரு பண்டத்தின் விலை கணிசமாய் உயருமாயின், அதே அளவுக்கு வேருெரு பண்டத்தின் விலை இன்றியமை யாதவாறு விழுந்தே இருக்க வேண்டும், ஏனெனில் எந்தப் பண்டத்துடனும் பிற பண்டங்கள் பரிவர்த்தனை செய்யப் படும் விகிதத்தைப்பண அளவில் குறிப்பதே அப்பண்டத்தின் விலையாகும். உதாரணமாய், ஒரு கஜம் பட்டுத் துணியின் விலை ஐந்து மார்க்கிலிருந்து ஆறு மார்க்காய் உயருமாயின், வெள்ளியின் விலை பட்டுத் துணியுடன் ஒப்பிடுகையில் விழுந்து விடுகிறது; இதே போல தமது பழைய விலைகளிலேயே இருந்துள்ள ஏனைய எல்லாப் பண்டங்களின் விலைகளும் பட்டுத் துணியுடன் ஒப்பிடுகையில் விழுந்துவிடுகின்றன. அதே அளவு பட்டுத் துணியைப் பெற முன்னிலும் அதிக அளவில் இந்தப்

பிற பண்டங்களைப் பரிவர்த்தனையாய்த் தர வேண்டியதாகிறது. ஒரு பண்டத்தின் விலை உயர்ந்து செல்வதால் ஏற்படும் விளைவு என்ன? செழித்தோங்கும் இந்தத் தொழிற் கிளையினுள் திரளாய் மூலதனம் கொட்டப்படும்; சாதக நிலையிலுள்ள இந்தத் தொழிலரங்கில் சாதாரண அளவிலான லாபங்களே கிடைக்கும்படியான நிலைமை தோன்றுகிற வரை, அல்லது இன்னும் சரியாய்ச் சொல்வதெனில் அமித உற்பத்தியின் காரணமாய் இத்தொழிலரங்கின் உற்பத்திப் பொருள்களுடைய விலை உற்பத்திச் செலவுக்கும் கீழே சரிந்து செல்லும் வரை மூலதனம் தொடர்ந்து பாய்ந்து கொண்டிருக்கும்.

இதற்கு மாறாய், ஒரு பண்டத்தின் விலை அதன் உற்பத்திச் செலவுக்கும் கீழே சரிந்துவிடுமாயின், அப்பண்டத்தின் உற்பத்தியிலிருந்து மூலதனம் வெளியே எடுக்கப்படும். காலத்துக்கு ஒவ்வாததாகிவிட்ட காரணத்தால் அழிந்தொழிய வேண்டிய தொழிற் கிளையாய் இருந்தாலன்றி, இத்தகைய ஒரு பண்டத்தின் உற்பத்தியானது, அதாவது அதன் அளிப்பானது, மூலதனம் வெளியே ஓடிச் செல்வதைத் தொடர்ந்து தேவைக்கு இசைவானதாகும் வரை, அதாவது பண்டத்தின் விலை உயர்ந்து மீண்டும் பண்டத்தின் உற்பத்திச் செலவுக்குச் சமனமாகும் வரை, அல்லது இன்னும் சரியாய்ச் சொல்வதெனில் அளிப்பானது தேவைக்கும் கீழே சரியும் வரை, அதாவது பண்டத்தின் விலை மீண்டும் அதன் உற்பத்திச் செலவுக்குக் கூடுதலாகும்படி உயரும் வரை, மேலும் மேலும் சுருங்கிச் செல்லும். ஏனெனில் எந்தப் பண்டத்தின் நடப்பு விலையும் எப்பொழுதும் அதன் உற்பத்திச் செலவுக்குக் கூடுதலாகவோ, அல்லது குறைவாகவோதான் இருந்து வருகிறது.

இவ்வாறு மூலதனம் இடையறாது ஒரு தொழிலரங்கிலிருந்து இன்னொன்றுக்கு வருவதையும் செல்வதையும் காண்கிறோம். உயர்ந்த விலைகள் உள்வருதலையும், குறைந்த விலைகள் வெளிச்செல்லுதலையும் அதிகரிக்கச் செய்கின்றன.

இன்னொரு கண்ணோட்டத்திலிருந்து, எப்படி அளிப்பு மட்டுமின்றி தேவையும்கூட உற்பத்திச் செலவால் நிர்ணயிக்கப்படுகிறது என்பதை நாம் விளக்கலாம். ஆனால் இது நம்முடைய விவாதப் பொருளிலிருந்து நம்மை நெடுந் தொலைவு விலகிச் செல்லும்படி வைத்துவிடும்.

அளிப்பு, தேவை இவற்றின் ஏற்றயிறக்கங்கள் எப்படி இடையருது பண்டத்தின் விலையை உற்பத்திச் செலவுக்குத் திரும்பி வரச் செய்கின்றன என்பதை இப்பொழுது நாம் கவனித்தோம். பண்டத்தின் உண்மை விலை எப்பொழுதும் அப்பண்டத்தின் உற்பத்திச செலவுக்குக் கூடுதலாகவோ, அல்லது குறைவாகவோ இருப்பது மெய்தான் என்ருலும், ஏற்றமும் இறக்கமும் எதிரெதிர் வழியில் ஒன்றையொன்று சமனப்படுத்திக் கொண்டுவிடுகின்றன; இவ்விதம் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில், தொழில் துறையின் ஏற்றத்தையும் தணிவையும் சேர்த்துக் கருதுகையில் பண்டங்கள் அவற்றின் உற்பத்திச் செலவுகளுக்கு ஏற்ப ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகின்றன, ஆகவே இப்பண்டங்களின் விலை இவற்றின் உற்பத்திச் செலவால் நிர்ணயிக்கப் படுகிறது.

விலையானது உற்பத்திச் செலவால் நிர்ணயிக்கப்படுகிறது என்பதைப் பொருளியலாளர்களுடைய அர்த்தத்தில் புரிந்து கொள்ளக் கூடாது. பண்டங்களின் சராசரி விலை உற்பத்திச் செலவுக்குச் சமம், இது ஒரு விதி என்பதாய்ப் பொருளியலாளர்கள் கூறுகின்றனர். ஏற்றம் இறக்கத்தாலும், இறக்கம் ஏற்றத்தாலும் சரிக்கட்டப்படும் இந்த அராஜக இயக்கத்தை அவர்கள் தற்செயலான நிகழ்வாய்க் கருதுகிருர்கள். இதே அளவு உரிமையுடன் ஏற்றயிறக்கங்களை விதியாகவும், விலையானது உற்பத்திச் செலவால் நிர்ணயிக்கப்படுவதைத் தற்செயலான நிகழ்வாகவும் கருத முடியும்—வேறு சில பொருளியலாளர்கள் உண்மையில் இவ்வாறே கருதியுமுள்ளனர். ஆனல் இந்த ஏற்றயிறக்கங்களை மேலும் நெருங்கிச் சென்று பார்க்கையில்—தம்முடன் படுபயங்கர நாசங்களைக் கொண்டு வந்து, பூகம்பங்களைப் போல முதலாளித்துவச் சமுதாயத்தை அதன் அடித்தளங்களும் அடங்கலாய் ஆட்டிக் குலுக்குகின்றவை இவையேதான் என்பது தெரியும்—இந்த ஏற்றயிறக்கங்களின் போதுதான் விலைகள் உற்பத்திச் செலவினுல் நிர்ணயிக்கப்படுகின்றன. இந்த ஒழுங்கின்மையின் ஒட்டுமொத்த இயக்கம்தான் இதன் ஒழுங்காகும். இந்தத் தொழில் துறை அராஜகத்தின் போது, வட்டத்திலான இந்த இயக்கத்தின்போது, போட்டியானது ஓர் அதீத நிலையை மற்ருேர் அதீத நிலையால் ஈடுகட்டுவதாய்ச் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஆக, பண்டத்தின் விலை அப்பண்டத்தின் உற்பத்திச் செலவுக்குக் கூடுதலாய் உயரும் காலங்கள், அது உற்பத்திச் செலவுக்குக் கீழே சரியும் காலங்களாலும், இதற்கு எதிரான நிலைமையில் பின்னவை முன்னவையாலும் சரிகட்டப்படும் படி, பண்ட விலையானது அப்பண்டத்தின் உற்பத்திச் செல வால் நிர்ணயிக்கப்படுவதைக் காண்கிறோம். ஆனால் இது தொழில் துறையின் குறிப்பிட்ட தனியொரு உற்பத்திப் பொருளுக்குப் பொருந்தாது, தொழிற் துறை முழுவதுக்கும் மட்டுமே பொருந்தும். ஆகவே தனிப்பட்ட ஒரு தொழி லதிபருக்கு இது பொருந்தாது, தொழிலதிபர்கள் அனைவரின் வர்க்கத்துக்கு மட்டுமே பொருந்தும்.

உற்பத்திச் செலவால் விலை நிர்ணயிக்கப்படுவதானது, ஒரு பண்டத்தின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரத் தால் விலை நிர்ணயிக்கப்படுவதற்குச் சமமாகும், ஏனெனில் உற்பத்திச் செலவில் உள்ளடங்கியவை எவையெனில், 1) மூலப் பொருள்களும் உற்பத்திக் கருவிகளின் தேய்மானமும் —அதாவது, உற்பத்தி செய்யப்படுவதற்குக் குறிப்பிட்ட அளவு உழைப்பு நாட்கள் செலவாகின்றவையும், ஆகவே குறிப்பிட்ட அளவு உழைப்பு நேரத்தைக் குறிக்கின்றவையு மாகிய தொழில் துறை உற்பத்திப் பொருள்களும், 2) நேரடி யான உழைப்பும்தான் (நேரம்தான் இந்த உழைப்பின் அளவையாகும்).

பொதுவில் பண்டங்களின் விலையை ஒழுங்கியக்கும் அதே பொது விதிகள்தாம், கூலியையும், அதர்வது உழைப்பின் விலையையும் ஒழுங்கியக்குகின்றன.

கூலியின் ஏற்றமும் இறக்கமும், அளிப்புக்கும் தேவைக் கும் ஒப்ப, உழைப்பு சக்தியை வாங்குவோராகிய முதலாளி களுக்கும் உழைப்பு சக்தியை விற்போராகிய தொழி லாளர்களுக்கும் இடையிலான போட்டியின் திசைவழிக்கு ஒப்ப நடைபெறுகின்றன. பொதுவாய்க் கூலியின் ஏற்ற யிறக்கங்கள் பண்டங்களது விலைகளின் ஏற்றயிறக்கங் களுக்கு ஏற்ப அமைகின்றன. ஆயினும் இந்த ஏற்றயிறக்கங் களின் வரம்புகளுக்குள், உழைப்பின் விலையானது உற்பத்திச் செலவால், அதாவது உழைப்பு சக்தியெனும் இந்தப் பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு அவசியமான உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்படும்.

அப்படியானால், உழைப்பு சக்தியின் உற்பத்திச் செலவு எவ்வளவு?

தொழிலாளி தொடர்ந்து ஒரு தொழிலாளியாய் இருக்கும் படி பராமரிக்கப்படுவதற்கும், ஒரு தொழிலாளியாய் வளர்க்கப்படு வதற்கும் தேவையான செலவுதான் அது.

ஆகவே, எந்த ஒரு வேலைக்கும் தேவையான பயிற்சிக் காலம் எவ்வளவுக்கு எவ்வளவு குறைவாய் இருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு தொழிலாளியின் உற்பத்திச் செல வும் குறைந்து, தொழிலாளியின் உழைப்பினுடைய விலையும், அதாவது கூலியும் குறைவாகின்றது. வேலை பழகிக் கொள் வதற்குரிய பயிற்சிக் காலம் தேவைப்படாமல் தொழிலாளி உயிரோடு இருத்தல் மட்டுமே போதுமானதாயுள்ள தொழிற் கிளைகளில், அவருடைய உற்பத்திக்கு அவசியமான செலவு அவர் உயிர் வாழ்வதற்கும் வேலை செய்யும் ஆற்றலு டையவராய் இருப்பதற்கும் அவசியமான பண்டங்களுக்கு அனேகமாய்ச் சமமாகிவிடுகின்றது. ஆகவே அவருடைய உழைப்பின் விலை, அவசியமான பிழைப்புச் சாதனங்களின் விலையால் நிர்ணயிக்கப்பட்டுவிடும்.

எனினும் மற்றோர் அம்சமும் இங்கு இடம் பெறுகிறது. தொழிலதிபர் தமது பண்டத்தின் உற்பத்திச் செலவையும், இவ்விதம் உற்பத்திப் பொருளின் விலையையும் கணக்கிடுகை யில் உழைப்புக் கருவிகளுடைய தேய்மானத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறார். உதாரணமாய், 1,000 மார்க் செலவு செய்து அவர் ஓர் இயந்திரத்தை வாங்குகிறார் என்றால், அந்த இயந்திரம் பத்து ஆண்டுகளில் தேய்ந்து போய் உபயோக மற்றதாகிவிடுகிறது என்றால், பத்து ஆண்டுகளின் முடிவில் இந்தத் தேய்ந்துபோன இயந்திரத்துக்குப் பதிலாய்ப் புதியது ஒன்றை வாங்கிக் கொள்ளும் பொருட்டு, ஒவ்வோர் ஆண்டும் தனது பண்டங்களின் விலையுடன் 100 மார்க்கைக் கூட்டிக் கொள்கிறார். இதே போல, சாமானிய உழைப்பு சக்தியின் உற்பத்திச் செலவைக் கணக்கிடுகையில், தொழிலாளர்களது இனம் தன்னைத் தானே பெருகச் செய்து, தேய்ந்து போய் உபயோகமற்றவர்களாகும் தொழிலாளர்களுக்குப் பதில் புதியவர்களைத் தோற்றுவித்துக் கொள்வதற்கு வழி செய் யும் பொருட்டு புனருற்பத்திச் செலவையும் சேர்த்துக் கொண்டாக வேண்டும். இயந்திரத்தின் தேய்மானம் கணக்

கில் எடுத்துக் கொள்ளப்படுவது போலவே, இவ்விதம் தொழிலாளியின் தேய்மானமும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஆகவே சாமானிய உழைப்பு சக்தியின் உற்பத்திச் செலவு என்பது தொழிலாளியின் வாழ்வுக்கும் புனருற்பத்திக் குமான செலவு ஆகும். வாழ்வுக்கும் புனருற்பத்திக்குமான இந்தச் செலவுதான் கூலி ஆகின்றது. இவ்வாறு நிர்ணயிக்கப் படும் கூலி குறைந்தபட்சக் கூலி என்றழைக்கப்படுகிறது. இந்தக் குறைந்தபட்சக் கூலி, பொதுவாய் உற்பத்திச் செல வால் நிர்ணயிக்கப்படும் பண்டங்களது விலையைப் போலவே, இனம் அனைத்துக்கும் பொருந்துமே அன்றி, தனிப்பட்ட ஒருவருக்குப் பொருந்துவதல்ல. தனிப்பட்ட தொழிலாளர் கள், லட்சக் கணக்கான தொழிலாளர்கள், வாழ்வதற்கும் தம்மைப் புனருற்பத்திச் செய்து கொள்வதற்கும் போதிய அளவு பெறுவதில்லை, ஆனால் தொழிலாளி வர்க்கம் அனைத் துக்குமான கூலியானது அதன் ஏற்றயிறக்கங்களது வரம்பு களுக்குள் இந்தக் குறைந்தபட்ச மட்டத்தை அடைய முனை கிறது.

வேறு எந்தப் பண்டத்தின் விலையையும் போலவே கூலியையும் ஒழுங்கியக்கும் மிகவும் பொதுவான விதிகளை நாம் புரிந்து கொண்டுவிட்டதால், இனி நமது விவாதப் பொருளின் தனித்தனி விவரங்களைப் பரிசீலிக்கலாம்.

## 3

புதிய மூலப் பொருளையும் புதிய உழைப்புக் கருவிகளை யும் புதிய பிழைப்புச் சாதனங்களையும் உற்பத்தி செய்வதற் காகப் பயன்படுத்தப்படும் மூலப் பொருள்களும் உழைப்புக் கருவிகளும் எல்லா வகையான பிழைப்புச் சாதனங்களும் அடங்கியதே மூலதனம். மூலதனத்தின் இந்த உள்ளடக்கக் கூறுகள் யாவும் உழைப்பால் தோற்றுவிக்கப்பட்டவை யாகும், உழைப்பின் உற்பத்திப் பொருள்களாகும், சேமிக்கப் பட்ட உழைப்பாகும். புதிய பொருள் உற்பத்திக்கான ஒரு சாதனமாய்ப் பயன்படும் சேமிக்கப்பட்ட உழைப்புதான் மூலதனம் எனப்படுவது.

பொருளியலாளர்கள் இவ்வாறே கூறுகின்றனர்.

நீக்ரோ அடிமை என்பது யார்? கறுப்பு நிற இனத்தவராகிய ஒரு மனிதர். இப்படி ஒரு விளக்கம் கூறுவதும் ஒன்றுதான், வேறு விதமாய்க் கூறுவதும் ஒன்றுதான்.

நீக்ரோ இனத்தவர் நீக்ரோ இனத்தவர்தான். குறிப்பிட்ட சில உறவுகளில்தான் அவர் அடிமையாகின்றார். பருத்தி நூற்பு ஜென்னியானது பருத்தி நூற்கும் இயந்திரமே ஆகும். குறிப்பிட்ட சில உறவுகளில்தான் அது மூலதனம் ஆகின்றது. இந்த உறவு முறைகளிலிருந்து தனியே துண்டிக்கப்பட்டபின் அது மூலதனமாய் இருப்பதில்லை—எப்படி தங்கம் தானுகவே பணமாகிவிடுவதில்லையோ, அல்லது எப்படி சர்க்கரையே சர்க்கரையின் விலையாவதில்லையோ அதே போல.

பொருள் உற்பத்தியின் போது மனிதர்கள் இயற்கையின் மீது மட்டுமின்றி, தம்முள் ஒருவர்மீது ஒருவரும் செயல் படுகின்றனர். குறிப்பிட்ட வழியில் ஒத்துழைத்து, தமது செயற்பாடுகளைப் பரஸ்பரம் பரிவர்த்தனை செய்து கொள்வதன் மூலம்தான் அவர்கள் பொருள் உற்பத்திச் செய்கின்றனர். பொருள் உற்பத்தி செய்யும் பொருட்டு அவர்கள் தம்முள் குறிப்பிட்ட தொடர்புகளும் உறவுகளும் கொள்கின்றனர்; இந்தச் சமூகத் தொடர்புகளுக்கும் உறவுகளுக்கும் உட்பட்டே இயற்கை மீதான அவர்களது செயல் நடந்தேறுகிறது, அதாவது பொருள் உற்பத்தி நடைபெறுகிறது.

உற்பத்தியாளர்கள் தம்முள் கொள்ளும் இந்தச் சமூக உறவுகள், தமது செயற்பாடுகளைப் பரிவர்த்தனை செய்து கொண்டு பொருள் உற்பத்திச் செயல் முறை முழுவதிலும் அவர்கள் பங்கெடுத்துக் கொள்வதற்குரிய இந்த நிலைமைகள் இயல்பாகவே உற்பத்திச் சாதனங்களுடைய தன்மைக்கு ஏற்ப மாறுபடுகின்றன. புதிய போர்க் கருவிகளான துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து சேனையின் உள் ஒழுங்கமைப்பு முழுதுமே தவிர்க்க இயலாதபடி மாறி விட்டது; தனியாட்கள் ஒரு சேனையாய் அமைந்து சேனையாய்ச் செயல்படுவதற்கான உறவுநிலைகளும், வெவ்வேறு சேனைகளுக்கு இடையிலான உறவுகளும் மாற்றமடைந்தன.

இவ்விதம் உற்பத்திக்கான பொருளாயதச் சாதனங்களாகிய உற்பத்தி சக்திகள் மாற்றமடைந்து வளர்ச்சியுறுவதைத்

தொடர்ந்து, தனியாட்கள் பொருள் உற்பத்தி செய்வதற்குரிய சமூக உறவுகளும், அதாவது உற்பத்தியின் சமூக உறவுகளும் மாற்றமடைகின்றன. உற்பத்தி உறவுகளின் ஒட்டுமொத்தமே சமூக உறவுகள் எனப்படுபவை, சமுதாயம், இன்னும் குறிப்பாய் வரலாற்று வளர்ச்சியில் குறிப்பிட்ட ஒரு கட்டத்திலுள்ள சமுதாயம், தனக்கே உரித்தான தனியொரு குணமுடைய ஒரு சமுதாயம் எனப்படுவது. பண்டையச் சமுதாயம், பிரபுத்துவச் சமுதாயம், முதலாளித்துவச் சமுதாயம் ஆகியவை உற்பத்தி உறவுகளது இப்படிப்பட்ட ஒட்டுமொத்தங்களே ஆகும்; இவை ஒவ்வொன்றும் அதே போதில் மனிதகுல வரலாற்றில் தனியொரு வளர்ச்சிக் கட்டத்தைக் குறிக்கின்றது.

மூலதனமும் பொருளுற்பத்தியின் ஒரு சமூக உறவுதான். இது முதலாளித்துவ உற்பத்தி உறவாகும், முதலாளித்துவச் சமுதாயத்துக்குரிய உற்பத்தி உறவாகும். மூலதனத்தில் அடங்கியுள்ள பிழைப்புச் சாதனங்களும் உழைப்புக் கருவிகளும் மூலப் பொருள்களும் குறிப்பிட்ட சமூக நிலைமைகளில் தானே, குறிப்பிட்ட சமூக உறவுகளில்தானே உற்பத்தி செய்யப்பட்டு சேமிக்கப்படுகின்றன? குறிப்பிட்ட சமூக நிலைமைகளில்தானே, குறிப்பிட்ட சமூக உறவுகளில்தானே அவை புதிய உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்றன? புதிய உற்பத்திக்காகப் பயன்படும் பொருள்களை இந்தக் குறிப்பிட்ட சமூகத் தன்மைதானே மூலதனமாய் மாற்றுகின்றது?

மூலதனமானது பிழைப்புச் சாதனங்களாலும் உழைப்புக் கருவிகளாலும் மூலப் பொருள்களாலும் மட்டும் ஆனதல்ல, உற்பத்திப் பொருள் வடிவுடையவற்றால் மட்டும் ஆனதல்ல, இதே அளவுக்குப் பரிவர்த்தனை மதிப்புகளாலும் ஆனதாகும். அதில் உள்ளடங்கிய எல்லாப் பொருள்களும் பரிவர்த்தனைப் பண்டங்களாகும். ஆகவே மூலதனம் என்பது பொருள் வடிவிலான தொகை மட்டுமல்ல, அது பரிவர்த்தனைப் பண்டங்களது, பரிவர்த்தனை மதிப்புகளது, சமூகப் பரிமாணங்களது தொகையும் ஆகும்.

மூலதனத்துள் கம்பளிக்குப் பதில் பருத்தியும், கோதுமைக்குப் பதில் அரிசியும், அல்லது ரயில் பாதைகளுக்குப் பதில் நீராவிக் கப்பல்களையும் வைப்பதாயினும், மூலதனத்தின்

பருப்பொருளாகிய இந்தப் பருத்தியும் அரிசியும் நீராவிக் கப்பல்களும் முன்பு அதன் அடக்கப் பொருளாயிருந்த கம்பளியையும் கோதுமையையும் ரயில் பாதைகளேயும் போல அதே பரிவர்த்தனே மதிப்பு கொண்டதாய் இருக்கும் வரை, இம்மூலதனம் மாற்றமின்றி அப்படியேதான் இருக்கிறது. மூலதனத்தில் கிஞ்சித்தும் மாற்றம் ஏற்படாமல் மூலதனத்தின் பருப்பொருள் இடையருது மாறிக் கொண்டிருக்க முடியும்.

ஆனல் எந்த விதமான மூலதனமும் பரிவர்த்தனேப் பண்டங்களாலான, அதாவது பரிவர்த்தனே மதிப்புகளாலான தொகைதான் என்ருலும், பரிவர்த்தனேப் பண்டங்களாலாகிய, பரிவர்த்தனே மதிப்புகளாலாகிய ஒவ்வொரு தொகையும் மூலதனமாகிவிடுவதில்லே.

பரிவர்த்தனே மதிப்புகளாலான ஒவ்வொரு தொகையும் ஒரு பரிவர்த்தனே மதிப்புதான். தனித்தனி பரிவர்த்தனே மதிப்பு ஒவ்வொன்றும் பரிவர்த்தனே மதிப்புகளாலாகிய ஒரு தொகைதான். உதாரணமாய் 1,000 மார்க் பெறுமானமுள்ள ஒரு வீடு 1,000 மார்க் பரிவர்த்தனே மதிப்புடையதாகும். ஒரு ஃபெனிக் பெறுமானமுள்ள ஒரு காகிதத் துண்டானது ஒவ்வொரு பகுதியும் ஃபெனிக்கில் நூற்றில் ஒரு பாகமாகிய ஒரு நூறு பகுதிகளது பரிவர்த்தனே மதிப்புகளாகிய தொகையாகும். பிறவற்றுடன் பரிவர்த்தனே செய்யப்படக் கூடிய பொருள்கள்தான் **பரிவர்த்தனேப் பண்டங்கள்.** அவை பரிவர்த்தனே செய்யப்படக் கூடிய குறிப்பிட்ட விகிதம்தான் அவற்றின் **பரிவர்த்தனே மதிப்பு** ஆகிறது, அல்லது இதையே பணத்தில் சொன்னல் அது அவற்றின் **விலே** ஆகிறது. இந்தப் பொருள்களின் அளவானது இவை **பரிவர்த்தனேப் பண்டங்களாய்** இருக்கும் இந்தத் தன்மையிலோ, இவை **பரிவர்த்தனே மதிப்பைக்** குறிப்பனவாய் இருப்பதிலோ, குறிப்பிட்ட ஒரு **விலேயைப்** பெற்றிருப்பதிலோ எந்த மாற்றத்தையும் உண்டாக்கிவிடுவதில்லே. மரமானது, அது பெரிதாயினும், சிறிதாயினும் மரமேதான். இரும்பை நாம் பிற பொருள்களுடன் அவுன்சுகளில் கணக்கிட்டுப் பரிவர்த்தனே செய்து கொண்டாலும், அல்லது அந்தர்களில் கணக்கிட்டு பரிவர்த்தனே செய்து கொண்டாலும், இரும்பானது பரிவர்த்தனேப் பண்டமாய், பரிவர்த்தனே மதிப்பாய் இருக்கும் இந்தத்

தன்மையில் இதனால் எதாவது வேறுபாடா ஏற்படுகிறது? ஒரு பரிவர்த்தனைப் பண்டம் அதன் அளவுக்கு ஏற்ப அதிகமான அல்லது குறைவான மதிப்புடையதாகிறது, உயர்ந்த அல்லது தாழ்ந்த விலையுடையதாகிறது.

அப்படியானால், பரிவர்த்தனைப் பண்டங்களது, பரிவர்த்தனை மதிப்பினது ஒரு தொகை மூலதனமாவது எப்படி?

தன்னை நேரடியான, உயிருள்ள உழைப்பு சக்தியுடன் பரிவர்த்தனை செய்து கொள்வதன் மூலமாய், தன்னைச் சுயேச்சையான ஒரு சமூக சக்தியாய், அதாவது சமுதாயத்தில் ஒரு பகுதியின் சக்தியாய்ப் பேணிப் பாதுகாத்துக் கொண்டும் பெருகச் செய்து கொண்டும் செல்வதால். உழைப்பதற்குத் தனக்குள்ள ஆற்றலைத் தவிர வேறு உடைமை ஏதுமில்லாத ஒரு வர்க்கம் இருப்பது மூலதனத்துக்கு அத்தியாவசியமான ஒரு முன்தேவையாகும்.

சேமிக்கப்பட்டதும், கடந்த காலத்தியதும், பொருள் வடிவிலானதுமாகிய உழைப்பானது நேரடியான, உயிருள்ள உழைப்பின்மீது செலுத்தும் ஆதிக்கம்தான் சேமிக்கப்பட்ட உழைப்பை மூலதனமாய் மாற்றுகின்றது.

சேமிக்கப்பட்ட உழைப்பு புதிய உற்பத்திக்கான ஒரு சாதனமாய் உயிருள்ள உழைப்புக்குப் பயன்படுவதில் மூலதனம் அடங்கியிருக்கவில்லை. உயிருள்ள உழைப்பானது சேமிக்கப்பட்ட உழைப்பின் பரிவர்த்தனை மதிப்பு பேணிப் பாதுகாக்கப்படுவதற்கும் பெருக்கிச் செல்லப்படுவதற்குமான ஒரு சாதனமாய்ப் பின்னதற்குப் பயன்படுவதில்தான் மூலதனம் அடங்கியிருக்கிறது.

முதலாளிக்கும் கூலித்தொழிலாளிக்கும் இடையிலான பரிவர்த்தனையில் நடைபெறுவது என்ன?

தொழிலாளி தமது உழைப்பு சக்திக்குப் பரிவர்த்தனையாய்ப் பிழைப்புச் சாதனங்கள் பெறுகிறார். ஆனால் முதலாளியோ தமது பிழைப்புச் சாதனங்களுக்குப் பரிவர்த்தனையாய்த் தொழிலாளியின் உழைப்பை, தொழிலாளியின் பொருள் உற்பத்தித் திறனுள்ள செயற்பாட்டை, தொழிலாளி தாம் நுகர்வதைத் திருப்பித் தோற்றுவித்துத் தருவதோடன்றி சேமிக்கப்பட்ட உழைப்புக்கு இதன்முன் அதனிடமிருந்ததைவிட கூடுதலான மதிப்பையும் அளித்திடும் ஆக்க சக்தியைப் பெறுகிறார். கைவசமுள்ள பிழைப்புச் சாதனங்

களில் ஒரு பகுதியை முதலாளியிடமிருந்து தொழிலாளி பெற்றுக் கொள்கிருர். இந்தப் பிழைப்புச் சாதனங்களைத் தொழிலாளி எக்காரியத்துக்காகப் பயன்படுத்துகிருர்? உடனடி நுகர்வுக்காக. ஆனல் உழைப்புச் சாதனங்களை நான் நுகர்ந்து முடித்ததும், என்னை அவை உயிர் வாழச் செய்யும் அந்தக் காலத்தை நான் புதிய பிழைப்புச் சாதனங்களை உண்டாக்குவதற்காக, அதாவது நுகர்வின்போது நுகர்வினல் அழிக்கப்படும் மதிப்புகளினிடத்தில் புதிய மதிப்புகளை என் உழைப்பால் உண்டாக்குவதற்காகப் பயன்படுத்திக் கொண்டாலன்றி, மீட்க முடியாதவாறு அவற்றை நான் இழந்துவிடுகிறேன். ஆனல் இந்தப் புனிதப் புனருற்பத்தி சக்தியைத்தான், தொழிலாளி தாம் பெற்றுக் கொள்ளும் பிழைப்புச் சாதனங்களுக்குப் பரிவர்த்தனையாய் முதலாளியிடம் ஒப்படைத்துவிடுகிருர். ஆகவே தனக்குப் பயன்படாதவாறு அதை அவர் இழந்துவிடுகிருர்.

ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம்: குத்தகைச் சாகுபடியாளர் ஒருவர் தனது நாட் கூலியாளுக்கு நாள் ஒன்றுக்கு ஐந்து வெள்ளிக் குரோஷென் தருகிருர். இந்த ஐந்து வெள்ளிக் குரோஷெனுக்காகக் கூலியாள் பகல் முழுதும் சாகுபடியாளரின் நிலத்தில் வேலை செய்கிருர்; இவ்விதம் சாகுபடியாளருக்குப் பத்து வெள்ளிக் குரோஷென் கிடைக்கும்படிச் செய்கிருர். சாகுபடியாளர் நாட் கூலியாளுக்குத் தாம் தர வேண்டியதை மீட்டுக் கொள்வதோடுகூட ஒன்றுக்கு இரு மடங்காய்ப் பெற்றுக் கொள்கிருர். இவ்விதம் அவர் கூலியாளுக்குத் தரும் ஐந்து வெள்ளிக் குரோஷெனை பயனுள்ள, பொருளுற்பத்திக்குரிய முறையில் பயன்படுத்திக் கொண்டுவிடுகிருர், நுகர்ந்து கொண்டுவிடுகிருர். இந்த ஐந்து வெள்ளிக் குரோஷெனைக் கொண்டு அவர் அதைப் போல் இரு மடங்கு மதிப்புள்ள விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்து ஐந்து வெள்ளிக் குரோஷெனைப் பத்து குரோஷெனுக்கித் தரும் கூலியாளது உழைப்பையும் சக்தியையும் வாங்கிக்கொள்கிருர். ஆனல் கூலியாள் இவ்வாறன்றி, தமது பொருளுற்பத்தி சக்திக்குப் பிரதியாய்—இந்த சக்தியால் கிடைக்கக்கூடிய பயனை விலை பேசி சாகுபடியாளரிடம் ஏற்கனவே விற்றுவிட்டார்—ஐந்து வெள்ளிக் குரோஷெனைப் பெற்றுக்கொள்கிருர். இந்த ஐந்து வெள்ளிக் குரோஷெனைப்

பிழைப்புச் சாதனங்களாய்ப் பரிவர்த்தனை செய்து இவற்றை அதிக வேகத்திலோ, குறைந்த வேகத்திலோ நுகர்ந்து தீர்த்துவிடுகிறார். இந்த ஐந்து வெள்ளிக் குரோஷென் இவ்வாறு இரு வழிகளில் நுகரப்படுகிறது: புனருற்பத்திக்குரிய முறையில் மூலதனத்தால் நுகரப்படுகிறது, எப்படியெனில் பத்து வெள்ளிக் குரோஷென் உற்பத்தி செய்த உழைப்பு சக்திக்காக[1] அது பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகிறது; உற்பத்தித் திறனில்லாத முறையில் தொழிலாளியால் நுகரப்படுகிறது, எப்படியெனில் இவற்றைப் பரிவர்த்தனை செய்து பெறப்படும் பிழைப்புச் சாதனங்கள் என்றென்றுக்குமாய் மறைந்துவிடுகின்றன, சாகுபடியாளருடன் மீண்டும் இதே பரிவர்த்தனையில் ஈடுபட்டாலன்றி இந்த மதிப்பைத் திரும்பப் பெற முடியாது. இவ்வாறு மூலதனத்துக்கு முன்தேவை கூலியுழைப்பு; கூலியுழைப்புக்கு முன்தேவை மூலதனம். ஒன்று மற்றொன்றின் முன்னிபந்தனையாய் அமைகிறது, ஒன்று மற்றொன்றைத் தோற்றுவிக்கிறது.

பஞ்சாலையில் வேலை செய்யும் தொழிலாளி பருத்தித் துணிகளை மட்டும்தானா உற்பத்தி செய்கிறார்? இல்லை, மூலதனத்தையும் உற்பத்தி செய்கிறார். அவர் உற்பத்தி செய்யும் மதிப்புகள் திரும்பவும் புதிதாய் அவர் உழைப்பை ஆணையிட்டு அழைத்து அதைக் கொண்டு புதிய மதிப்புகளைத் தோற்றுவிக்கப் பயன்படுகின்றன.

மூலதனம் உழைப்பு சக்திக்காகத் தன்னைப் பரிவர்த்தனை செய்து கொள்வதன் மூலம்தான், கூலியுழைப்பைப் படைப்பித்துச் செயல்பட வைப்பதன் மூலம்தான் அதிகரித்துச் செல்ல முடியும். கூலித்தொழிலாளருடைய உழைப்பு சக்தி மூலதனத்தை அதிகரிக்கச் செய்வதன் மூலம்தான், தான் எதற்கு அடிமையாய் இருக்கிறதோ அந்த சக்தியை மேலும் பலமுடையதாக்குவதன் மூலம்தான் மூலதனத்துக்காகத் தன்னைப் பரிவர்த்தனை செய்து கொள்ள முடியும். எனவே

---

[1] ''உழைப்பு சக்தி'' என்னும் தொடர் இங்கு எங்கெல்சால் சேர்க்கப்பட்டதல்ல; புதிய ரைனிஷ் செய்தியேட்டில் மார்க்ஸ் வெளியிட்டிருந்த வாசகத்தில் ஏற்கனவே இருந்தது.—[பதிப்பாசிரியர்.]

மூலதனத்தின் அதிகரிப்பு பாட்டாளி வர்க்கத்தின், அதாவது தொழிலாளி வர்க்கத்தின் அதிகரிப்பு ஆகும்.

இவ்வாறு முதலாளியின் நலன்களும் தொழிலாளியின் நலன்களும் ஒருமித்துவிடுவதாய் முதலாளித்துவ வர்க்கத்தாரும் அவர்களது பொருளியலாளர்களும் சாதிக்கின்றனர். மெய்தான்! மூலதனம் தொழிலாளியை வேலைக்கு அமர்த்திக் கொள்ளாவிடில் தொழிலாளி அழிய வேண்டியதுதான். உழைப்பு சக்தியை மூலதனம் சுரண்டாவிடில் மூலதனம் அழிய வேண்டியதுதான். உழைப்பு சக்தியைச் சுரண்டும் பொருட்டு மூலதனம் அதை விலைக்கு வாங்கியாக வேண்டும். ஆகவே உற்பத்தியில் ஈடுபடும் மூலதனமானது, அதாவது உற்பத்தித் திறனுள்ள மூலதனமானது எவ்வளவுக்கு எவ்வளவு வேகமாய் அதிகரிக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு தொழில் துறை செழித்தோங்குகிறது, அவ்வளவுக்கு அவ்வளவு முதலாளித்துவ வர்க்கத்தார் மேலும் மேலும் தம்மைச் செல்வந்தர்களாக்கிக் கொள்கின்றனர், தொழிலும் வாணிபமும் சிறப்புறுகின்றன, அவ்வளவுக்கு அவ்வளவு முதலாளிக்கு அதிகமான தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர், அவ்வளவுக்கு அவ்வளவு அதிக விலைக்குத் தொழிலாளி தம்மை விற்றுக் கொள்ள முடிகிறது.

எனவே, உற்பத்தித் திறனுள்ள மூலதனம் சாத்தியமான அளவுக்கு மிகவும் வேகமாய் வளர்ந்து பெருகுவதுதான் தொழிலாளருக்கு ஓரளவு உகந்த நிலைமை நிலவுவதற்குரிய அத்தியாவசிய நிபந்தனையாகும்.

ஆனல் உற்பத்தித் திறனுள்ள மூலதனம் வளர்ந்து பெருகுவது எதைக் குறிக்கிறது? உயிருள்ள உழைப்பின் மீது சேமிக்கப்பட்ட உழைப்புக்குள்ள ஆதிக்கம் வளர்ந்து பெருகுவதைக் குறிக்கிறது. தொழிலாளி வர்க்கத்தின்மீது முதலாளித்துவ வர்க்கம் செலுத்தும் ஆதிக்கம் வளர்ந்து பெருகுவதைக் குறிக்கிறது. கூலியுழைப்பானது தன்மீது ஆட்சி செலுத்தும் ஏனையோரது செல்வத்தை, தனது பகை சக்தியான மூலதனத்தை உற்பத்தி செய்யுமாயின், திரும்பவும் புதிதாய்க் கூலியுழைப்பு தன்னை மூலதனத்தின் ஒரு பகுதியாக்கிக் கொள்ள வேண்டுமென்ற, அதாவது மேலும் மேலும் வேகமான வளர்ச்சி இயக்கத்தினுள் திரும்பவும் புதிதாய் மூலதனத்தை உந்திவிடும் நெம்புகோலாக்கிக் கொள்ள

வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில், இந்தப் பகை சக்தியிடமிருந்து அதற்கு உழைப்புச் சாதனங்கள், அதாவது பிழைப்புச் சாதனங்கள் திரும்பி வந்து சேரும்.

மூலதனத்தின் நலன்களும் தொழிலாளர்களுடைய நலன்களும் ஒருமித்துவிடுவதாய்க் கூறுவதானது, மூலதனமும் கூலியுழைப்பும் ஒரே உறவின் இரு பக்கங்களாகும் என்று கூறுவதாகுமே ஒழிய வேறல்ல. கொள்ளை வட்டிக்காரரும் ஊதாரியும் எப்படி ஒருவருக்கொருவர் நிபந்தனையாய் அமைகின்றனரோ அதே போல மூலதனமும் கூலியுழைப்பும் ஒன்றுக்கொன்று நிபந்தனையாய் அமைகின்றன.

கூலித்தொழிலாளி கூலித்தொழிலாளியாய் இருக்கும் வரை அவருடைய கதி மூலதனத்தைச் சார்ந்திருக்கிறது. இவ்வளவுதான் தொழிலாளிக்கும் முதலாளிக்குமிடையே இருப்பதாய்ப் பெரிதாய் மெச்சிக் கொள்ளப்படும் ஒத்த நலன்.

## 4

மூலதனம் பெருகுமாயின் கூலியுழைப்பு பெருகுகிறது, கூலித்தொழிலாளர்களது எண்ணிக்கை உயருகிறது. சுருங்கக் கூறுவதெனில் மேலும் அதிக எண்ணிக்கையானோரின் மீது மூலதனத்தின் ஆதிக்கம் விரிந்து பரவுகிறது. மிகவும் சாதகமான சந்தர்ப்பத்தையே எடுத்துக் கொள்வோம்: உற்பத்தித் திறனுள்ள மூலதனம் வளர்ந்து பெருகும் போது, உழைப்புக்கான தேவையும் வளர்ந்து பெருகிறது; ஆகவே உழைப்புக்குரிய விலையான கூலியும் உயருகிறது.

ஒரு வீடு பெரிதாகவோ, சிறிதாகவோ இருக்கலாம், சுற்றிலுமுள்ள வீடுகளும் அதே போல சிறிதாய் இருக்கும் வரை குடியிருப்புக்குரிய சமூகக் கோரிக்கைகள் யாவற்றையும் அது பூர்த்தி செய்கிறது. ஆனால் அந்தச் சிறிய வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய மாளிகை எழட்டும், உடனே அந்தச் சிறிய வீடு ஒரு குடிசையாய்க் குறுகிப் போய்விடுகிறது. அதன் சொந்தக்காரர் உரிமை கொண்டாடக் கூடியது சொற்பம் தான், அல்லது எதுவும் இல்லை என்பதை இப்பொழுது அந்தச் சிறிய வீடு புலப்படுத்தும். நாகரிக முன்னேற்றத்தைத் தொடர்ந்து அது எவ்வளவுதான் உயரமாய் வளர்ந்திடினும், பக்கத்திலுள்ள பெரிய மாளிகையும் அதே அளவுக்கோ,

இன்னுங்கூட அதிக அளவுக்கோ வளர்ந்து செல்லுமாயின், ஒப்பளவில் சிறிதாயிருக்கும் அந்த வீட்டில் இருப்பவர் மேலும் மேலும் நலங் குன்றி திருப்தியில்லாதவராகவும் அதன் நான்கு சுவர்களுக்குள் கட்டுண்டு நெரிக்கப்படுகிற வராகவும்தான் குறைபட்டுக் கொள்வார்.

கூலி குறிப்பிடத்தக்கவாறு உயர வேண்டுமாயின் உற்பத்தித் திறனுள்ள மூலதனம் வேகமாய் வளர்வது அதற்குரிய முன்தேவையாகும். உற்பத்தித் திறனுள்ள மூல தனத்தின் துரித வளர்ச்சி அதே அளவுக்குத் துரிதமாய்ச் செல்வத்தையும் ஆடம்பரத்தையும் சமூகத் தேவைகளையும் சமூக நுகர்வின்பத்தையும் அதிகரிக்கச் செய்கிறது. இவ்விதம் தொழிலாளியின் நுகர்வின்பமும் அதிகரித்திருக்கிறது என்றாலுங்கூட அதனால் உண்டாகும் சமூக மனநிறைவு, தொழிலாளிக்கு எட்டாதபடி மிகமிகக் கூடுதலாகிவிட்ட முதலாளியின் நுகர்வின்பத்துடன் ஒப்பிடுகையிலும், பொது வில் சமுதாயத்தின் வளர்ச்சி நிலையுடன் ஒப்பிடுகையிலும் குறைந்துவிடுகிறது. நமது விருப்பங்களும் இன்பங்களும் சமுதாயத்திலிருந்தே எழுகின்றன; ஆகவே சமுதாயத்தைக் கொண்டே நாம் அவற்றை அளவிடுகிறோமே அல்லாது, அவற்றைப் பூர்த்தி செய்ய உதவும் பொருள்களைக் கொண் டல்ல. இவை யாவும் சமூகத் தன்மை வாய்ந்தவையாய் இருப்பதால், இவை ஒப்பு இயல்புடையவையாகும்.

பொதுவில் கூலியானது, அதை நான் பரிவர்த்தனை செய்து பெறக் கூடிய பண்டங்களின் அளவால் நிர்ணயிக்கப் படுவது மட்டுமல்ல. அது பல்வேறு உறவுகளும் உள்ளடங்கி யதாகும்.

தொழிலாளர்கள் தமது உழைப்பு சக்திக்காகப் பெற்றுக் கொள்வது முதலாவதாக குறிப்பிட்ட பணத் தொகை யாகும். இந்தப் பண விலையால் மட்டுமா கூலி நிர்ணயிக்கப் படுகிறது?

பதினாறும் நூற்றாண்டில் ஐரோப்பாவில் புழக்கத்திலிருந்த தங்கமும் வெள்ளியும் அமெரிக்காவில் மேலும் செழுமையான, மேலும் சுலபமாய் வெட்டியெடுக்கப்படக்கூடிய சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாய் அதிகரித்துவிட்டன. எனவே பிற பண்டங்களுடன் ஒப்பிடுகையில் தங்கமும்

வெள்ளியும் மதிப்பில் குறைந்துவிட்டது. நாணயமாக்கப் பட்ட வெள்ளியில் தொழிலாளர்கள் தமது உழைப்பு சக்திக்காக முன்புபோல அதே தொகையையே பெற்றுக்கொண்டனர். அவர்களுடைய உழைப்பின் பண விலை மாற்றமின்றி அப்படியே இருந்தது; ஆயினும் அவர்களுடைய கூலி குறைந்துவிட்டது; ஏனெனில் அதே அளவு வெள்ளியைப் பரிவர்த்தனை செய்து முன்னிலும் குறைவான அளவில் பிற பண்டங்களைப் பெற்றுக்கொண்டனர். பதினாறும் நூற்றாண்டில் மூலதனத்தின் வளர்ச்சியையும் முதலாளித்துவ வர்க்கத்தின் உதயத்தையும் ஊக்குவித்த நிலைமைகளில் இதுவும் ஒன்றாகும்.

இன்னொரு நிகழ்வை எடுத்துக் கொள்வோம். 1847ஆம் ஆண்டு குளிர் காலத்தில், அறுவடை தவறியதால் மிகவும் அத்தியாவசியமான பிழைப்புச் சாதனங்களாகிய தானியங்களும் இறைச்சியும் வெண்ணெயும் பாலாடையும் பிறவும் வெகுவாய் விலை உயர்ந்துவிட்டன. தொழிலாளர்கள் தமது உழைப்பு சக்திக்காக முன்பு போல அதே பணத் தொகையைப் பெற்றதாய் வைத்துக் கொள்வோம். அவர்களுடைய கூலி குறைந்துவிடவில்லையா? நிச்சயமாய்க் குறையவே செய்தது. அதே அளவு பணத்துக்குப் பரிவர்த்தனையாய்க் குறைந்த அளவு ரொட்டியும் இறைச்சியும் பிறவும் பெற்றுக் கொண்டனர். வெள்ளியின் மதிப்பு குன்றியதால் அல்ல, பிழைப்புச் சாதனங்களின் மதிப்பு ஏறிவிட்டதால் அவர்களுடைய கூலி குறைந்துவிட்டது.

முடிவில், உழைப்பின் பண விலை அப்படியே இருக்க, புதிய இயந்திரங்கள் பயன்படுத்தப்படுதல், சாதகமான பருவ நிலை, இத்தியாதி காரணங்களால் எல்லா விவசாயப் பண்டங்களும் தொழிற் பண்டங்களும் விலை குறைந்துவிடுவதாய் வைத்துக் கொள்ளுங்கள். அதே அளவு பணத்துக்குத் தொழிலாளர்கள் இப்பொழுது முன்னிலும் அதிகமாய் எல்லா வகைப் பண்டங்களையும் வாங்க முடிகிறது. ஆகவே, கூலியின் பண மதிப்பு மாறவில்லை என்பதால், அவர்களுடைய கூலி உயர்ந்துவிடுகிறது.

இவ்விதம் உழைப்பின் பண விலை, அதாவது பெயரளவிலான கூலி, உண்மைக் கூலியைக் குறிப்பதில்லை, அதாவது கூலிக்குப் பரிவர்த்தனையாய் உண்மையில் தரப்படும் பண்டங்களின் தொகுதியைக் குறிப்பதில்லை. ஆகவே கூலி உயர்வு

அல்லது கூலிக் குறைவு என்பதாய்ப் பேசும் போது, நாம் உழைப்பின் பண விலையை மட்டும், பெயரளவிலான கூலியை மட்டும் நினைவில் கொண்டால் போதாது.

ஆனால் தொழிலாளி தன்னை முதலாளியிடம் விற்றுக் கொள்ளும் பணத் தொகையாகிய பெயரளவிலான கூலியுடனோ, அல்லது இந்தப் பணத் தொகைக்குத் தொழிலாளி வாங்கிக் கொள்ளக் கூடிய பண்டங்களின் தொகுதியைக் குறிக்கும் உண்மைக் கூலியுடனோ, கூலி என்பதில் உள்ளடங்கிய உறவுகள் தீர்ந்துவிடவில்லை.

யாவற்றுக்கும் முதலாய், கூலியானது முதலாளிக்குக் கிடைக்கும் ஆதாயத்துடன், லாபத்துடன் அதற்குள்ள உறவாலும்—ஒப்புநிலை, சார்புநிலை கூலியாலும்—நிர்ணயிக்கப் படுகிறது.

உண்மைக் கூலியானது உழைப்பின் விலையைப் பிற பண்டங்களின் விலையுடன் ஒப்பிட்டுக் கூறுகிறது. ஒப்புநிலைக் கூலியானது இவ்வாறின்றி, உழைப்பால் தோற்றுவிக்கப் பட்ட புதிய மதிப்பில் நேரடி உழைப்புக்குக் கிடைக்கும் பங்கைச் சேமிக்கப்பட்ட உழைப்புக்கு, அதாவது மூலதனத்துக்குக் கிடைக்கும் பங்குடன் ஒப்பிட்டுக் கூறுகிறது.

மேலே பக்கம் 14ல்[1] கூறினோம்: ''கூலியானது தொழிலாளி உற்பத்தி செய்யும் பண்டத்தில் தொழிலாளிக்குரிய பங்கு அல்ல. ஏற்கனவே இருந்து வரும் பண்டங்களில் எப்பகுதியைக் கொண்டு முதலாளி உற்பத்தித் திறனுள்ள குறிப்பிட்ட ஓர் அளவு உழைப்பு சக்தியைத் தனக்கு வாங்கிக் கொள்கிறாரோ, அப்பகுதியே கூலியாகும்''. ஆனால் முதலாளி இந்தக் கூலியை, தொழிலாளி உற்பத்தி செய்யும் பொருளை அவர் விற்கிறாரே அந்த விலையிலிருந்து திருப்பியெடுத்தாக வேண்டும். பொதுவாய், தான் செலவிடும் உற்பத்திச் செலவை அன்னியில் ஓர் உபரி, அதாவது லாபம், தனக்கு எஞ்சும் படி அவர் இந்தக் கூலியைத் திருப்பியெடுத்தாக வேண்டும். தொழிலாளியால் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களின் விற்பனை விலையானது முதலாளியைப் பொறுத்தவரை மூன்று பகுதிகளாய்ப் பிரிக்கப்படுகிறது: முதலாவது, அவரால்

---

[1] இப்புத்தகத்தின் பக்கங்கள் 28-29யைப் பார்க்கவும்—[பதிப்பாசிரியர்.]

வாங்கித் தரப்படும் மூலப் பொருள்களின் விலையைத் திருப்பி யெடுத்துக் கொள்வதற்கும், அவரால் வாங்கித் தரப்படும் கருவிகள், இயந்திரச் சாதனங்கள், ஏனைய உழைப்புச் சாத னங்கள் ஆகியவற்றின் தேய்மானத்தைத் திருப்பியெடுத்துக் கொள்வதற்குமுரிய பகுதி; இரண்டாவது, அவரால் தரப் படும் கூலியைத் திருப்பியெடுத்துக் கொள்வதற்குரிய பகுதி; மூன்றாவது, இறுதியில் எஞ்சும் உபரி, அதாவது முதலாளியின் லாபம். முதலாவது பகுதி ஏற்கனவே இருந்து வரும் மதிப்பு களைத் திருப்பித் தருவதாய் மட்டும் இருக்க, கூலியைத் திருப்பியெடுப்பதற்கும் முதலாளியின் உபரியாகிய லாபத் திற்குமான பகுதிகள், மொத்தத்தில், தொழிலாளியின் உழைப்பால் தோற்றுவிக்கப்பட்டு மூலப் பொருள்களுடன் சேர்த்துக் கொள்ளப்பட்ட புதிய மதிப்பிலிருந்து எடுக்கப் படுகிறவை என்பது தெளிவு. இந்த அர்த்தத்தில் கூலியையும் லாபத்தையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்க்கும் பொருட்டு, இவை இரண்டையும் நாம் தொழிலாளியால் உற்பத்தி செய்யப்படும் பொருளில் கிடைக்கப் பெறும் பங்குகளாய்க் கருதலாம்.

உண்மைக் கூலி மாறாமல் அப்படியே இருக்கலாம், உயர வுங்கூடச் செய்யலாம், ஆயினும் அதேபோதில் ஒப்புநிலைக் கூலி குறைந்துவிடலாம். உதாரணமாய் பிழைப்புச் சாதனங் கள் யாவும் விலையில் மூன்றில் இரு பங்கு குறைந்துவிட, நாள் ஒன்றுக்கான கூலி மூன்றில் ஒரு பங்கே குறைவதாய், எடுத்துக்காட்டாய் மூன்று மார்க்கிலிருந்து இரண்டு மார்க் காய்க் குறைவதாய் வைத்துக் கொள்வோம். தொழிலாளி முன்பு மூன்று மார்க்குகளைக் கொண்டு வாங்க முடிந்ததை விட அதிக அளவு பண்டங்களை இந்த இரண்டு மார்க்குகளைக் கொண்டு வாங்க முடிகிறது என்ற போதிலும், முதலாளியின் லாபத்துடன் ஒப்பிடுகையில் தொழிலாளியின் கூலி குறைந்து விட்டது. முதலாளியின் (உதாரணமாய், தொழிலதிபரின்) லாபம் ஒரு மார்க் அதிகரித்துள்ளது; அதாவது, தொழிலா ளிக்கு அவர் தரும் முன்னிலும் குறைவான அளவு பரிவர்த் தனை மதிப்புகளைப் பெற்றுக் கொண்டு முன்னிலும் அதிகமான அளவு பரிவர்த்தனை மதிப்புகளைத் தொழிலாளி உற்பத்தி செய்து தந்தாக வேண்டும். உழைப்புக்குக் கிடைக்கும் பங் குடன் ஒப்பிடும்போது, மூலதனத்துக்குக் கிடைக்கும் பங்கு

அதிகமாகிவிட்டது. சமூகச் செல்வம் மூலதனத்துக்கும் உழைப்புக்குமிடையே பங்கிட்டுக் கொள்ளப்படுவது, முன்னி லும் அசமத்துவமானதாகிவிட்டது. அதே அளவு மூலதனத் தைக் கொண்டு முதலாளி முன்னிலும் அதிக அளவு உழைப் பை வாங்கிச் செயல்பட வைக்க முடிகிறது. தொழிலாளி வர்க்கத்தின் மீது முதலாளித்துவ வர்க்கத்துக்குள்ள ஆதிக்கம் வளர்ந்து அதிகரித்துவிட்டது; தொழிலாளியின் சமூக நிலை மேலும் மோசமாகிவிட்டது, அதாவது முதலாளி யினுடையதைவிட மேலும் ஒரு படி தாழ்ந்துவிட்டது.

அப்படியானல், கூலி, லாபம் இவற்றின் எதிரெதிர் தொடர்பிலான உறவில் இவற்றின் ஏற்றத்தையும் இறக்கத்தையும் நிர்ணயிக்கும் பொது விதி எது?

இரண்டும் ஒன்றுக்கொன்று தலைகீழ் விகிதமுடையனவாய் இருக்கின்றன. உழைப்பின் பங்காகிய கூலி குறைந்து இறங்கும் அதே விகிதத்தில் மூலதனத்தின் பங்காகிய லாபம் உயர்ந்து ஏறுகிறது; எதிர்மாருய் லாபம் குறைந்து இறங்கும் அதே விகிதத்தில் கூலி உயர்ந்து ஏறுகிறது. கூலி எந்த அளவுக்குக் குறைகிறதோ அந்த அளவுக்கு லாபம் உயருகிறது, கூலி எந்த அளவுக்கு உயருகிறதோ அந்த அளவுக்கு லாபம் குறைகிறது.

இங்கே ஓர் ஆட்சேபணை எழுப்பப்படலாம்: முதலாளி தமக்குச் சொந்தமாயுள்ள உற்பத்திப்பொருள்களைத் தமக்குச் சாதகமான முறையில் பிற முதலாளிகளுடன் பரிவர்த்தனை செய்து கொள்வதாலும், புதிய சந்தைகள் திறக்கப்படு வதன் விளைவாகவோ பழைய சந்தைகளில் சொற்ப காலத் துக்குத் தேவை அதிகரிப்பதன் விளைவாகவோ தமது பண்டங் களுக்குத் தேவை அதிகமாவதாலும் இன்ன பிறவற்ரு லும் லாபம் பெறக் கூடும்; ஆகவே முதலாளியின் லாபம் கூலியின், உழைப்பு சக்தியினுடைய பரிவர்த்தனை மதிப்பின் ஏற்றத்தையோ இறக்கத்தையோ சாராமலே, பிற முதலாளி களை முந்திக் கொண்டு முன்செல்வதன் மூலம் அதிகரிக்க முடி யும், அல்லது உழைப்புக் கருவிகளில் ஏற்படும் மேம்பாடு, இயற்கை சக்திகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான புதிய வழி போன்ற காரணங்களாலும் முதலாளியின் லாபம் அதி கரிக்க முடியும் என்பதாய் ஆட்சேபணை எழுப்பப்படலாம்.

முதலாவதாக, எதிர்த் திசையிலிருந்து ஏற்படுவதாயினும் கூட விளைவு எப்படியும் ஒன்றேதான் என்பதை ஏற்றுக்

கொண்டாக வேண்டும். லாபம் உயர்ந்ததற்குக் கூலி குறைந்தது காரணமல்ல என்பது மெய்தான் என்ருலும், லாபம் உயர்ந்ததன் காரணத்தால் கூலி குறைந்துவிடுகிறது. ஏனெனில் அதே அளவு உழைப்பைக் கொண்டு, முதலாளி அதிக அளவிலான பரிவர்த்தனை மதிப்புகளைப் பெற்றுக் கொண்டுவிடுகிருர்; ஆனல் இதற்காக அவர் உழைப்புக்கு அதிக விலை கொடுக்கவில்லை. ஆகவே உழைப்பால் முதலாளிக்குக் கிடைக்கும் நிகர லாபத்துக்கு ஒப்புவீத அளவில் உழைப்புக்கு அளிக்கப்படுவது குறைவாகிவிடுகிறது.

அதோடுகூட, பண்டங்களின் விலைகளில் ஏற்றயிறக்கங்கள் ஏற்பட்டாலுங்கூட, ஒவ்வொரு பண்டத்தின் சாராசரி விலையானது, அதாவது பிற பண்டங்களுடன் அது பரிவர்த்தனை செய்யப்படும் விகிதமானது, அந்தப் பண்டத்தின் உற்பத்திச் செலவால் நிர்ணயிக்கப்படுகிறது என்பதை நினைவுபடுத்துகின்ருேம். எனவே முதலாளித்துவ வர்க்கத்தினுள் ஒருவரையொருவர் முந்திக் கொண்டு முன்செல்லும் நிகழ்வுகள் இன்றியமையாதவாறு தம்மைச் சரிகட்டிக் கொண்டுவிடுகின்றன. இயந்திரச் சாதனங்களில் ஏற்படும் மேம்பாடும் பொருளுற்பத்தியில் இயற்கை சக்திகளது பயன்பாட்டுக்கான புது வழியும் அதே அளவு உழைப்பையும் மூலதனத்தையும் கொண்டு குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள் அதிக அளவிலான உற்பத்திப் பொருள்களைத் தயாரித்துக் கொள்ள வகை செய்கின்றனவே அல்லாது, எவ்வித்த்திலும் அதிக அளவிலான பரிவர்த்தனை மதிப்புகளைத் தோற்றுவித்துக் கொள்ள வகை செய்வதில்லை. நூற்பு ஜென்னியைப் பயன்படுத்துவதன்மூலம், இது கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு உற்பத்தி செய்யப்பட்டதைக் காட்டிலும் ஒரு மணி நேரத்தில் இரு மடங்கான நூலை, உதாரணமாய் ஐம்பதுக்குப் பதிலாய் நூறு இராத்தல் நூலை நான் உற்பத்தி செய்ய முடிகிறதெனில், நாளடைவில் இந்த நூறு இராத்தல் நூலுக்குப் பரிவர்த்தனையாய் முன்பு ஐம்பது இராத்தல் நூலுக்காகப் பெற்றதற்குச் சமமான அளவிலேதான் பிற பண்டங்களைப் பெற முடியும்; ஏனெனில் உற்பத்திச் செலவு சரிபாதியாய்க் குறைந்துவிட்டது, அதாவது அதே செலவில் முன்னிலும் இரு மடங்கான நூலை இப்பொழுது நான் தயாரித்தளிக்க முடிகிறது.

முடிவில், முதலாளித்துவ வர்க்கத்தார், குறிப்பிட்ட ஒரு நாட்டைச் சேர்ந்தோராயினும் சரி, அனைத்து உலகச் சந்தையைச் சேர்ந்தோராயினும் சரி, பொருளுற்பத்தியின் நிகர லாபத்தை எந்த விகிதத்தில் தம்முள் பங்கிட்டுக் கொண்ட போதிலும், இந்த நிகர லாபத்தின் மொத்த அளவு சேமிக்கப்பட்ட உழைப்பானது ஒட்டுமொத்தத்தில் நேரடி உழைப்பால் பெருகச் செய்யப்பட்டிருக்கும் அதே அளவுள்ள தாகவே எப்பொழுதும் இருக்கிறது. ஆகவே இந்த மொத்த அளவு, உழைப்பானது மூலதனத்தைப் பெருகச்செய்யும் அதே விகிதத்தில்தான், அதாவது கூலியுடன் ஒப்பிடுகையில் லாபம் உயர்ந்து செல்லும் அதே விகிதத்தில்தான் அதிகரிக்கின்றது.

ஆகவே, மூலதனத்துக்கும் கூலியுழைப்புக்குமாகிய உறவின் வரம்புகளுக்குள்ளேயே இருப்பதாயினும்கூட, மூலதனத்தின் நலன்களும் கூலியுழைப்பின் நலன்களும் நேர் விரோதமானவை என்பதைக் காண்கிறோம்.

மூலதனம் விரைவாய் அதிகரிப்பது லாபம் விரைவாய் அதிகரிப்பதற்குச் சமமாகும். உழைப்பின் விலை, ஒப்புநிலைக் கூலி அதே அளவுக்கு விரைவாய் குறையுமானால்தான் லாபம் விரைவாய் அதிகரிக்க முடியும். பெயரளவிலான கூலியுடன் கூடவே, அதாவது உழைப்பின் பண மதிப்புடன் கூடவே உண்மைக் கூலியும் உயர்ந்த போதிலும், லாபத்தைப் போல் அதே விகிதத்தில் உயராமல் இருக்குமாயின், ஒப்பு நிலைக் கூலி குறைய முடியும். உதாரணமாய், தொழிலும் வாணிபமும் விறுவிறுப்பாய் இருக்கும் காலங்களில் கூலி ஐந்து சதவீதமும் அதேபோது லாபம் முப்பது சதவீதமும் உயருமாயின், சார்புநிலையிலான, அதாவது ஒப்புநிலையிலான கூலி குறைந்துள்ளதே அன்றி அதிகரித்துவிடவில்லை

இவ்விதம் மூலதனம் அதிவேகமாய் வளர்வதைத் தொடர்ந்து தொழிலாளியின் வருவாய் அதிகரிக்கிறதெனில், தொழிலாளியை முதலாளியிடமிருந்து பிரித்திடும் சமுதாய ஏற்றத்தாழ்வும் அதேபோது அதிகரிக்கிறது; உழைப்பின் மீது மூலதனத்துக்குள்ள ஆதிக்கமும், உழைப்பானது மூல தனத்தைச் சார்ந்திருந்து கீழ்ப்படிய வேண்டியுள்ள நிலையும் அதேபோது அதிகரிக்கின்றன.

மூலதனத்தின் விரைவான வளர்ச்சியில் தொழிலாளிக்கு அக்கறை இருப்பதாய்ச் சொல்வது, தொழிலாளி ஏனையோ

ரின் செல்வத்தை மேலும் மேலும் விரைவாய் அதிகரிக்கச் செய்வதைத் தொடர்ந்து தொழிலாளிக்குக் கிடைக்கும் கவளங்கள் பெரிதாகிச் செல்லுமென்றும், வேலையில் அமர்த்தப்படக்கூடியோரும் தோற்றுவிக்கப்படக் கூடியோரு மான தொழிலாளர்களுடைய எண்ணிக்கை உயர உயர மூலதனத்தை அண்டிப் பிழைக்க வேண்டிய அடிமைகளின் திரள் மேலும் மேலும் அதிகரிக்க முடியுமென்றும் சொல்வ தாகுமே அன்றி வேறு ஒன்றுமில்லை.

இவ்வாறு நாம் தெளிவாய்க் காண்பது என்னவெனில்:

தொழிலாளி வர்க்கத்துக்கு **மிகவும் சாதகமான** சூழ் நிலையைக் குறிப்பதாயுள்ள **சாத்தியமான அளவுக்கு மிகவும் விரைவான மூலதன வளர்ச்சியுங்கூட,** எவ்வளவுதான் அது தொழிலாளியினுடைய பொருளாயத வாழ்நிலையை மேம் படுத்திய போதிலும், தொழிலாளி நலன்களுக்கும் முத லாளித்துவ வர்க்கதாரின், முதலாளிகளின் நலன்களுக்கு முள்ள பகைமையை நீக்கிவிடவில்லை. லாபமும் கூலியும் முன்பு போலவே **தலைகீழ் விகிதத்தில்தான்** இருக்கின்றன.

மூலதனம் விரைவாய் வளருமாயின், கூலியும் உயரலாம் ென்ற லும், மூலதனத்துக்குக் கிடைக்கும் லாபம் ஒப்பிட முடியாத அளவுக்கு மிகவும் விரைவாய் உயருகிறது. தொழி லாளியின் பொருளாயத நிலை மேம்பட்டிருக்கின்றது, ஆனால் தொழிலாளியின் சமூக நிலையை விலையாய்க் கொடுத்துதான் மேம்பட்டிருக்கின்றது. தொழிலாளியை முதலாளியிட மிருந்து பிரித்திடும் சமூக ஏற்றத்தாழ்வு மேலும் பெரிதாகி விடுகிறது.

முடிவில்:

உற்பத்தித் திறனுள்ள மூலதனம் சாத்தியமான அள வுக்கு மிகவும் விரைவாய் வளர்வதே கூலியுழைப்புக்கு மிகவும் சாதகமான நிலைமையாகுமெனக் கூறுவதானது, தொழிலாளி வர்க்கம் தனக்குப் பகையான சக்தியை, தனக்குச் சொந்த மாயில்லாமல் தன்மீது ஆதிக்கம் புரியும் செல்வத்தை எவ் வளவுக்கு எவ்வளவு அதிகரிக்கச் செய்து பெருக்குகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு சாதகமான நிலைமைகளில் கூலி யுழைப்பு புதிதாய் முதலாளித்துவச் செல்வத்தை அதி கரித்துச் செல்வதற்கு, மூலதனத்தின் ஆதிக்கத்தை ஓங்கச் செய்வதற்கு, முதலாளித்துவ வர்க்கம் அதற்குக் கட்டுப்

போட்டு தன்னுடன் இழுத்துச் செல்லப் பயன்படுத்தும் தங்கச் சங்கிலிகளைக் கூலியுழைப்பு தனக்குத் தயாரித்துக் கொள்வதோடு திருப்தியடைவதற்கு அனுமதிக்கப்படுகிறது என்று கூறுவதாகுமே அன்றி வேறல்ல.

## 5

உற்பத்தித் திறனுள்ள மூலதனத்தின் வளர்ச்சியும் கூலி உயர்வும் முதலாளித்துவப் பொருளியலாளர்கள் சாதிப்பது போல அப்படிப் பிரிக்க முடியாதபடி ஒன்றிணைந்தா இருக்கின்றன? அவர்களுடைய பேச்சை நாம் நம்பிவிடக் கூடாது. மூலதனம் கொழுக்கக் கொழுக்க, அதன் அடிமைக்கு மேலும் மேலும் நல்ல தீனி கிடைக்கும் என்பதாய் அவர்கள் கூறுவதையும்கூட நாம் நம்பக் கூடாது. தமது ஆடம்பரப் படாடோபங்களை வெளிப்படக் காட்டிப் பெருமைப்பட்டுக் கொள்ளும் பிரபுத்துவக் கோமான்களுடைய தப்பெண்ணங்கள் முதலாளித்துவ வர்க்கத்தாரிடம் இருக்கவில்லை, ஏனெனில் இவர்கள் அறிவொளி பெற்றவர்கள், கெட்டிக்காரத் தனமாய்க் கணக்கிட்டு வேலை செய்கிறவர்கள். முதலாளித்துவ வர்க்கத்தின் வாழ்நிலைமைகள் அவர்களைக் கணக்கிட்டு வேலை செய்யும்படிக் கட்டாயப்படுத்துகின்றன.

ஆகவே நாம் மேலும் நெருங்கிச் சென்று பரிசீலிக்க வேண்டும்:

**உற்பத்தித் திறனுள்ள மூலதனத்தின் வளர்ச்சியால் கூலியில் ஏற்படும் விளைவு என்ன?**

முதலாளித்துவச் சமுதாயத்தின் உற்பத்தித் திறனுள்ள மூலதனம் ஒட்டுமொத்த அளவில் வளருமாயின், உழைப்பின் சேமிப்பில் மேலும் பன்முக அதிகரிப்பு ஏற்படுகின்றது. எண்ணிக்கையிலும் பரிமாணத்திலும் மூலதனங்கள் அதிகரிக்கின்றன. மூலதனங்களது எண்ணிக்கைப் பெருக்கமானது, முதலாளிகளிடையிலான போட்டியை அதிகரிக்கச் செய்கிறது. மூலதனங்களது பரிமாணப் பெருக்கமானது, மேலும் பிரம்மாண்டப் போர்க் கருவிகள் கொண்டு வலிமை வாய்ந்த உழைப்புச் சேனைகளைத் தொழில் துறைப் போர்க்களத்தினுள் கொண்டு வருவதற்குரிய வாய்ப்புக்களை அளித்திடுகிறது.

மேலும் மலிவான விலைக்கு விற்பதன் மூலம்தான் ஒரு முதலாளி இன்னொருவரை அரங்கிலிருந்து விரட்டியடித்து அவருடைய மூலதனத்தைக் கைப்பற்றிக் கொள்ள முடியும். தன்னைப் போண்டியாக்கிக் கொள்ளாமல் மேலும் மலிவான விலைக்கு விற்க வேண்டுமாயின், அவர் மேலும் குறைந்த செலவில் உற்பத்தி செய்தாக வேண்டும், அதாவது உழைப் பின் உற்பத்தித் திறனைக் கூடுமான அதிக அளவுக்கு உயர்த்தி யாக வேண்டும். ஆனால் உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்த்தப்படுவது, யாவற்றுக்கும் முதலாய், மேலும் கூடுத லான உழைப்புப் பிரிவினை மூலம்தான், இயந்திரச் சாதனங்களை மேலும் வியாபகமாய்ப் புகுத்தி இடையறாது மேம்படுத்திச் செல்வதன் மூலம்தான். உழைப்புப் பிரிவினை செய்யப் படும் உழைப்புச் சேனை எவ்வளவுக்கு எவ்வளவு பெரிதாய் இருக்கிறதோ, இயந்திரச் சாதனங்கள் புகுத்தப்படும் வீச்சு எவ்வளவுக்கு எவ்வளவு பிரம்மாண்டமாய் இருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு உற்பத்திச் செலவும் குறைகின்றது, அவ்வளவுக்கு அவ்வளவு உழைப்பும் பயன் தருவதாகின்றது. எனவேதான் உழைப்புப் பிரிவினையையும் இயந்திரச் சாதனங் களையும் அதிகரித்துச் செல்ல வேண்டுமென்றும், சாத்திய மான அதிக அளவில் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் முதலாளிகளிடையே பொதுவான போட்டி மூளுகிறது.

இப்பொழுது அதிக அளவிலான உழைப்புப் பிரிவினை மூலமும் புதிய இயந்திரங்களை உபயோகத்துக்குக் கொண்டு வருவதன் மூலமும் அவற்றை மேம்படுத்துவதன் மூலமும் இயற்கை சக்திகளை மேலும் லாபகரமாகவும் விரிவாகவும் பயன்படுத்திக் கொள்வதன் மூலமும் ஒரு முதலாளி அதே அளவு உழைப்பையோ, சேமிக்கப்பட்ட உழைப்பையோ கொண்டு தனது போட்டியாளர்களைக் காட்டிலும் கூடுத லான பொருள்களை உற்பத்தி செய்வதற்கான வழியைக் கண்டு கொண்டுவிடுவாராயின், உதாரணமாய் இவருடைய போட்டியாளர்கள் அரை கஜம் துணி உற்பத்தி செய்யும் அதே நேரத்தில் இவர் ஒரு கஜம் துணி உற்பத்தி செய்ய முடியுமாயின், இந்த முதலாளி என்ன செய்வார்?

தொடர்ந்து அவர் அரை கஜம் துணியை அதே நிலவர விலையில் விற்றுக் கொண்டிருக்க முடியும். ஆனால் தனது

போட்டியாளர்களை அரங்கிலிருந்து விரட்டியடிக்கவும், தனது விற்பனையை விரிவாக்கிக் கொள்ளவும் இது அவருக்கு உதவாது. அவருடைய உற்பத்தி எந்த அளவுக்குப் பெருகியுள்ளதோ அதே அளவுக்கு, அவருக்கு விற்க வேண்டிய தேவையும் அதிகரித்திருக்கிறது. அவர் செயல்படச் செய்துள்ள அதிக சக்தி வாய்ந்த, அதிக அடக்கச் செலவுக்குரிய உற்பத்திச் சாதனங்கள், முன்னிலும் குறைவான விலைக்கு அவர் தமது பண்டங்களை விற்க முடியும்படிச் செய்திருப்பது மெய்தான் என்றாலும், அதேபோதில் அவை அவரை முன்னிலும் அதிகமான பண்டங்களை விற்கும்படி, தமது பண்டங்களுக்கு முன்னிலும் பெரிய அளவிலான சந்தையை வென்றுகொள்ளும் படிக் கட்டாயப்படுத்துகின்றன. எனவே நமது முதலாளி தமது போட்டியாளர்களைக் காட்டிலும் குறைந்த விலைக்கு தமது அரை கஜம் துணியை விற்பார்.

இம்முதலாளிக்கு ஒரு முழு கஜத்தின் உற்பத்திக்கு ஆகும் செலவு ஏனையோருக்கு அரை கஜத்தின் உற்பத்திக்கு ஆகும் செலவைவிட அதிகமல்ல என்றாலுங்கூட, இவர் தமது போட்டியாளர்கள் அரை கஜத்தை எவ்வளவுக்கு விற்கிறார் களோ அதற்குச் சமமாகிவிடும்படி அவ்வளவு மலிவாய் ஒரு முழு கஜத்தை வ்ற்க மாட்டார். ஏனெனில் அப்படி விற்றாரா யின், இந்தப் பரிவர்த்தனையின் மூலம் அவருக்குக் கூடுதலாய் ஒன்றும் கிடைத்துவிடாது, உற்பத்திச் செலவு மட்டுமேதான் திரும்பி வந்து சேரும். அவருக்குக் கிடைக்கக்கூடிய கூடுதல் வருவாயானது அவர் இயங்கச் செய்த கூடுதலான மூலதனத் தின் காரணமாய் வருவதாய் இருக்குமே ஒழிய ஏனையோரைக் காட்டிலும் கூடுதலாய் அவருக்கு அவருடைய மூலதனத்தி லிருந்து வரப் பெறும் ஆதாயமாய் இராது. தவிரவும், தமது போட்டியாளர்களுடைய விலையைக் காட்டிலும் ஒரு சிறு சதவீதத்துக்குக் குறைவான விலைக்குத் தமது பண்டங்களை விற்பாராயினுங்கூட அவர் தமது நோக்கத்தை நிறை வேற்றிக் கொண்டுவிடுகிறார். குறைவான விலைக்கு விற்பதன் மூலம் தமது போட்டியாளர்களை அரங்கிலிருந்து விரட்டுகிறார், அவர்களுடைய விற்பனையில் குறைந்தது ஒரு பகுதியையாவது கைப்பற்றிக் கொண்டுவிடுகிறார். முடிவில் பண்டத்தின் விற்பனை தொழில் துறையின் சாதகமான பருவத்தில் நடை பெறுகிறதா அல்லது பாதகமான பருவத்தில் நடைபெறு

கிறதா என்பதற்கு ஏற்ப, நடப்பு விலை எப்பொழுதுமே உற்பத்திச் செலவுக்கு அதிகமானதாகவோ குறைவானதாகவோ இருக்கும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதிகப் பயன் தரும் புதிய உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் முதலாளி தமக்கு உண்மையில் ஆகும் உற்பத்திச் செலவுக்கு எத்தனைச் சதவீதம் அதிகமான விலைக்கு விற்பார் என்பது, ஒரு கஜம் துணியின் நிலவர விலை இதுகாறும் வழக்கமாயிருந்துள்ள அதன் உற்பத்திச் செலவுக்குக் குறைவானதா அல்லது அதிகமானதா என்பதற்கு ஏற்ப மாறுபடும்.

ஆயினும் நமது முதலாளியின் தனிச் சலுகைக்குரிய நிலையானது அதிக காலத்துக்கு நீடிக்கக்கூடியதல்ல. போட்டியிடும் ஏனைய முதலாளிகளும் இதே இயந்திரங்களையும், இதே உழைப்புப் பிரிவினையையும் புகுத்துகின்றனர்; இதே அளவிலோ அல்லது இன்னும் பெருவீத அளவிலோ இவற்றைப் புகுத்துகின்றனர். துணியின் விலை அதன் பழைய உற்பத்திச் செலவுக்குக் குறைவாய் மட்டுமின்றி, அதன் புதிய உற்பத்திச் செலவுக்குங்கூட குறைவாய்த் தாழ்ந்துவிடும்படி அந்த அளவுக்குப் பொதுவாய் எல்லோருமே இவற்றைப் புகுத்த முற்பட்டுவிடுகின்றனர்.

ஆகவே இம்முதலாளிகள் ஒருவரையொருவர் தம்முள் ஒப்பிடுகையில், தமது நிலையானது புதிய உற்பத்திச் சாதனங்கள் புகுத்தப்படுவதற்கு முன்பு எப்படி இருந்ததோ, அதே போன்றதாகிவிடுவதைக் காண்கிறார்கள். இந்தச் சாதனங்களைக் கொண்டு அவர்கள் அதே விலைக்கு இரு மடங்கான உற்பத்திப் பொருள்களை அளிக்க முடிகிறது என்றால், இப்பொழுது இந்த இரு மடங்கான உற்பத்திப் பொருள்களைப் பழைய விலைக்குக் குறைவான விலையில் விற்கும்படிக் கட்டாயப் படுத்தப்படுகிறார்கள். இந்தப் புதிய உற்பத்திச் செலவின் அடிப்படையில் இதே கதை திரும்பவும் ஆரம்பமாகிறது: மேலும் கூடுதலான உழைப்புப் பிரிவினை, மேலும் கூடுதலான இயந்திரச் சாதனங்கள், இயந்திரச் சாதனங்களையும் உழைப்புப் பிரிவினையையும் மேலும் விரிந்த அளவில் பயனளிக்கும்படிப் பயன்படுத்தல். ஆகவே திரும்பவும் போட்டியானது இந்த விளைவுக்கு அதே எதிர்ச் செயற்பாட்டை உண்டாக்குகிறது.

இவ்விதமாய் உற்பத்தி முறையும் உற்பத்திச் சாதனங்களும் இடையருது மாற்றியமைக்கப்படுவதை, புரட்சிக்குள்ளாக்கப்படுவதைக் காண்கிருேம்; உழைப்புப் பிரிவினையைத் தொடர்ந்து தவிர்க்க முடியாதபடி மேலும் கூடுதலான உழைப்புப் பிரிவினையும், இயந்திரச் சாதனங்களது பயன்பாட்டைத் தொடர்ந்து மேலும் கூடுதலான இயந்திரச் சாதனங்களது பயன்பாடும், பெருவீத உற்பத்தியைத் தொடர்ந்து மேலும் பெருவீத அளவிலான உற்பத்தியும் நடைபெறக் காண்கிருேம்.

இந்த விதிதான் மீண்டும் மீண்டும் முதலாளித்துவப் பொருளுற்பத்தியை அதன் பழைய பாதையிலிருந்து பெயர்த்துத் தள்ளுகிறது, உழைப்பின் உற்பத்தித் திறனைத் தீவிரமாக்கிச் செல்லும்படி மூலதனத்தைப் பலவந்தம் செய்கிறது, காரணம் என்னவெனில் இது அவற்றைத் தீவிரமாக்கிவிட்டது; இந்த விதிதான் மூலதனத்துக்கு ஒய்வு சிறிதும் அளிக்காமல், ''இன்னும் போ! இன்னும் போ!'' என்று விடாமல் அதன் காதுக்குள் கூறி உசுப்பிய வண்ணமுள்ளது.

இந்த விதி, பண்டத்தின் விலையை வர்த்தகச் சுழற்காலங்களிலான ஏற்றயிறக்கங்களுக்கு உள்ளடங்கி, தவிர்க்க முடியாதபடி அப்பண்டத்தின் உற்பத்திச் செலவுக்குச் சமனப்படுத்தும் விதியே அன்றி வேறல்ல.

எவ்வளவுதான் சக்தி வாய்ந்த உற்பத்திச் சாதனங்களை ஒரு முதலாளி உற்பத்தி அரங்குக்குக் கொண்டு வருவாராயினும், போட்டியானது இந்த உற்பத்திச் சாதனங்களை சர்வவியாபகமாக்கிவிடும்; அது இப்படி இவற்றைச் சர்வவியாபகமாக்கும் தருணம் முதலாய் இம்முதலாளியின் மூலதனத்தினுடைய கூடுதலான பயனுடைமையால் ஏற்படும் ஒரே விளைவு என்னவெனில், அதே விலைக்கு முன்பு போல் பத்து, இருபது, நூறு மடங்கான பொருள்களை அளிக்க வேண்டுமென்பதுதான். அதிக அளவிலான பொருளை விற்பதன் மூலம் குறைவான விலைக்கு ஈடுகட்டும் பொருட்டு இப்பொழுது அவர் முன்பு போல ஆயிரம் மடங்கு விற்பனை செய்யவேண்டியிருக்கலாம், ஏனெனில் அதிக லாபம் பெறும் பொருட்டு மட்டுமின்றி உற்பத்திச் செலவைத் திருப்பியெடுக்கும் பொருட்டும்—உற்பத்திக் கருவி மேலும் மேலும் அதிகச் செலவுக்குரியதாகிறது என்பதைக் கண்டோம்—முன்னிலும் மிக விரிவான விற்பனை இப்பொழுது அவசியமாகிவிடுகிறது.

அதோடு இந்தப் பெருவீத விற்பனையானது அவருக்கு மட்டுமின்றி அவருடைய போட்டியாளர்களுக்கும் ஜீவ மரணப் பிரச்சினையாகிவிடுகிறது. ஆகவே, ஏற்கனவே கண்டு பிடிக்கப்பட்ட உற்பத்திச் சாதனங்கள் அதிக பயன் தருவனவாய் இருக்க இருக்க, பழைய போராட்டம் முன்னிலும் மேலும் மேலும் கடுமையாய் மீண்டும் வெடிக்கிறது. எனவே உழைப்புப் பிரிவினையும் இயந்திரச் சாதனங்கள் பயன்படுத்தப்படுவதும் ஒப்பிட முடியாத அளவுக்கு மிகப் பெரிய அளவில் புதிதாய்த் திரும்பவும் நடந்தேறும்.

உபயோகிக்கப்படும் உற்பத்திச் சாதனங்களின் வலிமை எவ்வளவாய் இருந்த போதிலும், போட்டியானது இந்த வலிமையால் கைவரப் பெறும் உன்னதப் பயன்களை மூலதனத்திடமிருந்து பறித்துவிட முனைகிறது. பண்டங்களின் விலையை மீண்டும் அவற்றின் உற்பத்திச் செலவுக்குச் சமன மாக்குவதன் மூலம் போட்டி இதைச் செய்ய முனைகிறது; பொருளுற்பத்தி எந்த அளவுக்கு மலிவாக்கப்பட முடியுமோ, அதாவது அதே அளவு உழைப்பைக் கொண்டு கூடுதலான பொருள்களை எவ்வளவுக்கு உற்பத்தி செய்ய முடியுமோ, அதே அளவுக்குப் போட்டியானது மலிவான பொருளுற் பத்தியை—அதே ஒட்டுமொத்த விலைக்கு மேன்மேலும் கூடுத லான பொருள்கள் தயாரித்து அளிக்கப்படுவதை—அத்தி யாவசிய விதியாக்கி இதைச் செய்ய முனைகிறது. இவ்விதம் முதலாளி அதே உழைப்பு நேரத்தில் அதிக அளவு உற்பத்தி செய்து அளிக்கவேண்டிய கடமையைத் தவிர, சுருங்கக் கூறின், தமது மூலதனத்தின் மதிப்பு பெருகுவதற்கான நிலைமைகளை மேலும் கடினமாக்கிக் கொள்வதைத் தவிர, தமது பிரயத் தனங்கள் மூலம் எதுவும் வென்று கொண்டு விடுவதில்லை. ஆகவே போட்டியானது அதன் உற்பத்திச் செலவு விதியுடன் முதலாளியை விரட்டிக் கொண்டு வர, முதலாளி தமது போட்டியாளர்களுக்கு எதிராய் உருவாக்கிக் கொள்ளும் ஒவ்வோர் ஆயுதமும் அவர் மீதே பாய, ஓயாது ஒழியாது புதிய இயந்திரங்களை—அதிகச் செலவடக்கமுள்ளவையே என்றாலும் மலிவான பொருளுற்பத்திக்கு வகை செய்யும் இயந்திரங்களை—பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதன் மூலமும், பழைய உழைப்புப் பிரிவினைக்குப் பதிலாய்ப் புதியதைப் புகுத்துவதன் மூலமும், புதியவற்றைப் போட்டி

யானது காலங் கடந்தனவாக்கிவிடும்வரை காத்திராதிருப்ப தன் மூலமும் முதலாளி இந்தப் போட்டியை மிஞ்சிச் செல்ல இடையருது முயலுகிறூர்.

ஜுர வேகங்கொண்ட இந்தக் கிளர்ச்சி அனைத்து உலகச் சந்தையிலும் ஒருங்கே ஏற்படுவதை இப்பொழுது நாம் மனத்துள் நினைத்துப் பார்ப்போமாயின், மூலதனத்தின் வளர்ச்சியும் சேமிப்பும் ஒன்றுகுவிப்பும் எப்படி இடையருத உழைப்புப் பிரிவினையையும், புதிய இயந்திரச் சாதனங்களின் பயன்பாட்டையும், பழைய இயந்திரச் சாதனங்கள் செம்மை செய்யப்படுதலையும் அதிவிரைவாகவும் மேலும் மேலும் பிரம்மாண்ட அளவிலும் நடந்தேறச் செய்கின்றன என் பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஆனல் உற்பத்தித் திறனுள்ள மூலதனத்தின் வளர்ச்சி யிலிருந்து பிரிக்க முடியாதவையான இந்தச் சூழ்நிலைகள் கூலி நிர்ணயத்தை எப்படிப் பாதிக்கின்றன?

அதிக அளவிலான உழைப்புப் பிரிவினையானது ஒரு தொழி லாளி ஐந்து, பத்து, அல்லது இருபது பேருடைய வேலை யைச் செய்யக் கூடியவராக்கிவிடுகிறது. ஆகவே இது தொழி லாளர்களிடையே போட்டியை ஐந்து, பத்து, இருபது மடங்கு கூடுதலாக்குகிறது. தொழிலாளர்கள் போட்டியிட்டுக் கொள்வது ஒருவர் பிறிதொருவரைக் காட்டிலும் மலிவான விலைக்குத் தம்மை விற்பதன் மூலம் மட்டுமல்ல; ஒருவர் ஐந்து, பத்து, இருபது பேருடைய வேலையைச் செய்வதன் மூலமும் போட்டியிட்டுக் கொள்கின்றனர். மூலதனத்தால் புகுத்தப்பட்டு இடையருது அதிகமாக்கிச் செல்லப்படும் உழைப்புப் பிரிவினை தொழிலாளர்களை இவ்வழியில் தம்மிடை யே போட்டியிட்டுக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கிறது.

தவிரவும், உழைப்புப் பிரிவினை அதிகரிக்கும் போது உழைப்பு எளிதாக்கப்படுகிறது. தொழிலாளியின் தனித் திறமை மதிப் பிழந்துவிடுகிறது. இத்தொழிலாளி கடுமையாய் உடல் அல்லது மூளை ஆற்றல்களை உபயோகிக்கத் தேவையில்லாத, சலிப்பூட்டும்படி ஒரேமாதிரியான, எளிய உற்பத்தி சக்தியாய் மாற்றப்பட்டுவிடுகிறூர். அவருடைய உழைப்பு எவரும் செய்யக்கூடிய உழைப்பாகிவிடுகிறது. எனவே எல்லாப் பக்கங் களிலும் போட்டியாளர்கள் அவரை நெருக்கியடிக்கின்றனர். அதோடு எவ்வளவுக்கு எவ்வளவு உழைப்பு எளிதாகவும்

சுலபமாய்க் கற்கக் கூடியதாகவும் இருக்கிறதோ, அதைப் பயின்று தேர்வதற்குத் தேவையான உற்பத்திச் செலவு குறைவாய் இருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு கூலி தாழ்வுற்று விழுகிறது, ஏனெனில் வேறு எந்தப் பண்ட விலையையும் போலக் கூலியும் உற்பத்திச் செலவால்தான் நிர்ணயிக்கப்படுவதாகும் என்பதை வாசகருக்கு நினைவு படுத்துகிறோம்.

ஆதலால் உழைப்பானது திருப்தியளிக்காததாகி, வெறுப் பூட்டுகிறதாகி வரும் அதே போது போட்டி அதிகரித்துக் கூலி குறைகிறது. தொழிலாளி அதிகமாய் வேலை செய்து— நீண்ட நேரத்துக்கு வேலை செய்தோ, ஒரு மணி நேரத்தில் முன்னிலும் அதிகமாய்ப் பொருளுற்பத்தி செய்தோ— தனது கூலியின் அளவு குறையாதவாறு பார்த்துக் கொள்ள முயலுகிறார். இல்லாமையின் நிர்ப்பந்தத்தால் தள்ளப்பட்டு, இவ்விதம் அவர் உழைப்புப் பிரிவினையின் தீய பலன்களை மேலும் அதிகமாக்குகின்றார். இதன் விளைவு என்னவெனில், எவ்வளவுக்கு எவ்வளவு அவர் அதிகம் வேலை செய்கிறாரோ அவர் பெறும் கூலி அவ்வளவுக்கு அவ்வளவு குறைவாகின்றது. அந்த அளவுக்கு அவர் தமது சக தொழிலாளர்களுடன் போட்டி போடுகிறார், இதனால் அவர்களைத் தன்னைப் போல வே அதே அளவுக்கு மோசமான பேரநிபந்தனைகளை ஏற்று வேலை செய்ய முற்படும் அத்தனைப் போட்டியாளர்களாக்கு கிறார், எனவே இறுதியாய்ப் பார்க்குமிடத்து, தம்முடனேயே, தொழிலாளி வர்க்க உறுப்பினர் என்ற முறையில் தம்முடனேயே போட்டி போடுகிறார் என்பதே இதற்குரிய காரணம்.

இதே விளைவுகளை இயந்திரச் சாதனங்கள், தேர்ச்சியுடைய தொழிலாளர்களுக்குப் பதிலாய்த் தேர்ச்சியில்லாதோரையும், ஆடவர்களுக்குப் பதிலாய்ப் பெண்டிரையும் வயது வந்தோருக்குப் பதிலாய்க் குழந்தைகளையும் வேலைக்கு அமர்த்தி, இன்னும் பெரிய அளவில் உண்டாக்குகின்றன. இயந்திரச் சாதனங்கள் புதிதாய்ப் புகுத்தப்படும் போது கைத் தொழிலாளர்களைப் பெரும் திரள்களில் நடுத் தெருவிலே தள்ளி, அவை இதே விளைவுகளை உண்டாக்குகின்றன; அவை வளர்ச்சி செய்யப்படும் போதும் மேம்படுத்தப்படும் போதும் மேலும் அதிக உற்பத்தித் திறனுள்ள இயந்திரச் சாதனங்களால் மாற்றப்படும் போதும் தொழிலாளர்களைச் சிறு

தொகுதிகளில் வேலையிலிருந்து அகற்றி அவை இதே விளைவுகளை உண்டாக்குகின்றன. முதலாளிகள் தம்மிடையே புரிந்து கொள்ளும் தொழில் துறை யுத்தத்தை மேலே நாம் சுருக்க வடிவில் சித்திரித்துள்ளோம். இந்த யுத்தத்தின் தனி விசேஷம் என்னவெனில் இதன் போர்கள் உழைப்புப் படையாட்களைப் படை விலக்கம் செய்து வீட்டுக்கு அனுப்புவதன் மூலம் வெல்லப்படுகின்றனவே ஒழிய, அவ்வளவாய்ப் படை திரட்டுவது மூலமல்ல. தானைத் தலைவர்களாகிய முதலாளிகள், தொழில் துறையின் படையாட்களில் அதிகமானோரை யாரால் படை விலக்கம் செய்து வீட்டுக்கு அனுப்ப முடிகிறது என்று தம்மிடையே ஒருவரோடொருவர் போட்டி போடுகின்றனர்.

இயந்திரச் சாதனங்களால் தேவைப்படாதோராக்கப்படும் தொழிலாளர்கள் புதிய கிளைகளில் வேலை தேடிக் கொள்கிறார்கள் என்பதாய்ப் பொருளியலாளர்கள் நம்மிடம் கூறுகின்றனர்.

வேலையிலிருந்து அகற்றப்படும் அதே தொழிலாளர்கள் உழைப்பின் புதிய கிளைகளில் இடம் பெறுவதாய் நேரடியாய் அடித்துப் பேச அவர்கள் துணிவதில்லை. உண்மைகள் கூக்குரலிட்டு இந்தப் பொய்யை மறுக்கின்றன. தொழிலாளி வர்க்கத்தின் பிற உள்ளடக்கப் பகுதிகளுக்கு, உதாரணமாய், படுத்துவிட்ட தொழிற் கிளையில் பிரவேசிக்கத் தயாராயிருந்த இளந் தலைமுறைத் தொழிலாளர் பகுதிக்குப் புதிய வேலை வாய்ப்புகள் தோன்றிவிடும் என்பதாய் மட்டுமே அவர்கள் சாதிக்கின்றனர். வாழ்விழந்து தெருவில் நிற்கும் தொழிலாளர்களுக்கு இது பெரியதோர் ஆறுதல்தான். மாண்புமிகு முதலாளிமார்கள் சுரண்டுவதற்குப் புத்தம் புதிய ஊனும் இரத்தமும் குறைவின்றிக் கிடைக்கின்றன, மடிவோரே மடிந்தோரைப் புதைக்கட்டுமென்று இருப்பார்கள். இது முதலாளித்துவ வர்க்கத்தார் தொழிலாளர்களுக்கு அளிக்கும் ஆறுதல் என்பதைக் காட்டிலும் தமக்குத் தாமே அளித்துக் கொள்ளும் ஆறுதல் என்பதுதான் பொருத்தமுடையதாய் இருக்கும். இயந்திரச் சாதனங்களின் காரணமாய், கூலித்தொழிலாளர்களது வர்க்கம் அனைத்துமே ஒழிக்கப்பட்டுவிட்டால், மூலதனத்துக்குப் பயங்கர நிலையல்லவா உண்டாகிவிடும்! கூலியுழைப்பு இல்லையேல் மூலதனம் மூலதனமாய் இல்லாதொழிந்தல்லவா விடும்!

ஆயினும், இயந்திரச் சாதனங்களால் நேரடியாய்த் தமது வேலைகளிலிருந்து விரட்டியடிக்கப்படும் தொழிலாளர்களும், இந்த வேலை வாய்ப்புக்காக ஏற்கனவே தயாராய்க் காத்திருந்த இளந் தலைமுறையினர் அனைவரும் புதிய வேலைத் துறையைப் பெறுவதாகவே வைத்துக் கொள்வோம். இழந்ததில் பெற்று வந்ததைப் போல் இந்தப் புதிய துறையிலும் அதே அளவு கூலி பெறலாமென யாரும் நினைக்கலாமா? அது பொருளாதாரத்தின் எல்லா விதிகளுக்கும் நேர் முரணாய் அல்லவா இருக்கும். நவீனத் தொழில் துறையானது அதிக சிக்கலான, உயர்நிலை வேலைக்குப் பதிலாய் எப்படி மேலும் எளிதான, கீழ்நிலை வேலையையே எப்பொழுதும் தோற்றுவிக்கிறது என்பதை நாம் கண்டோம்.

அப்படியானால் இயந்திரச் சாதனங்களின் காரணமாய் ஒரு தொழிற் கிளையிலிருந்து வெளியே அகற்றப்படும் தொழிலாளர் திரளினர் வேறொரு கிளையில் தமக்கு இடம் தேடிக் கொள்ள முடியுமா? முன்னதைக் காட்டிலும் பின்னது குறைவான, மோசமான ஊதியத்துக்குரியதாய் இருந்தாலொழிய எப்படி முடியும்?

இயந்திரச் சாதனங்களை உற்பத்தி செய்யும் தொழிற் கிளையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் விதிவிலக்கானவர் என்பதாய்க் கூறப்படுகிறது. தொழில் துறையில் மேலும் அதிகமான இயந்திரச் சாதனங்கள் தேவைப்பட்டு அவை உபயோகிக்கப் பட்டதும், தவிர்க்க முடியாதவாறு இயந்திரங்கள் அதிகரித்தாக வேண்டுமென்றும், ஆகவே இயந்திரச் சாதன உற்பத்தியும் அதிகரித்தாக வேண்டுமென்றும், இதனால் இயந்திர உற்பத்தியில் வேலை செய்யும் தொழிலாளர்களும் அதிகரித்தாக வேண்டுமென்றும் கூறப்படுகிறது. இந்தத் தொழிற் கிளையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தேர்ச்சி மிக்கவர்கள், ஏன் படித்தவர்களுங்கூட ஆவர் என்பதாய்க் கூறப்படுகிறது.

1840ஆம் ஆண்டு முதலாய் இந்தக் கூற்று—அதற்கு முன்னருங்கூட இது பாதி அளவுக்கே உண்மையாய் இருந்தது—சிறிதும் உண்மைக் கலப்பற்றதாகிவிட்டது. ஏனெனில் பருத்தி நூற்பில் எப்படியோ அதற்கு சிறிதும் குறைவின்றி இயந்திரச் சாதன உற்பத்தியிலும் மேன்மேலும் வல்லமை வாய்ந்த இயந்திரங்கள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

இயந்திர உற்பத்தி ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் மிகவும் சிக்கலான இயந்திரங்களை எதிர்நோக்க வேண்டியதாகி, சிறிதும் சிக்கலற்ற இயந்திரங்களாய் மட்டுமே பணியாற்ற முடிகிறது.

ஆனால் இயந்திரத்தின் காரணமாய் வேலையிலிருந்து அகற்றப்படும் ஆடவருக்குப் பதில், ஆலையானது, உதாரணமாய், மூன்று குழந்தைகளையும் ஒரு பெண்ணையும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாம். அப்பொழுது அந்த ஆடவரின் கூலி இந்த மூன்று குழந்தைகளுக்கும் ஒரு பெண்ணுக்கும் போதாதா? தொழிலாளர் இனத்தின் பராமரிப்புக்கும் இனவிருத்திக்கும் இந்தக் குறைந்தபட்சக் கூலி போதாதா? ஆகவே, முதலாளித்துவ வர்க்கத்தாரது அபிமானத்துக்குரிய இந்தத் தொடர் நிரூபிப்பது என்ன? ஒரு தொழிலாளர் குடும்பத்தின் பிழைப்புக்காக இப்பொழுது நான்கு மடங்கான தொழிலாளர்களது வாழ்க்கைகள் செலவிட்டுத் தீர்க்கப்படுகின்றன என்பதையே இத்தொடர் நிரூபிக்கிறது.

தொகுத்துக் கூறுவோம்: உற்பத்தித் திறனுள்ள மூலதனம் எவ்வளவுக்கு எவ்வளவு வளருகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு உழைப்புப் பிரிவினையும் இயந்திரச் சாதனங்களது பயன்பாடும் விரிவடைகின்றன. உழைப்புப் பிரிவினையும் இயந்திரச் சாதனங்களது பயன்பாடும் எவ்வளவுக்கு எவ்வளவு விரிவடைகின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு தொழிலாளர்களிடையே போட்டி விரிந்து பெருகுகிறது, அவ்வளவுக்கு அவ்வளவு அவர்களுடைய கூலி சுருங்குகிறது.

அதோடு, சமுதாயத்தின் மேலடுக்குகளிலிருந்து தொழிலாளி வர்க்கத்துக்குப் புதிய ஆட்கள் வந்து சேருகின்றனர். சிறு முதலாளிகளும் சிறு வட்டி வருமானத்தினருமாகிய ஒரு திரளினர் தொழிலாளி வர்க்கத்தின் அணியினுள் தள்ளப்படுகின்றனர்; வேறு வழி ஏதுமின்றி இவர்கள் தொழிலாளர்களுடன் கூடச் சேர்ந்து கொண்டு அவசரமாய்க் கையேந்தி நின்று வேலை கேட்கிறார்கள். இவ்வாறு வேலை கேட்டு உயர்த்தப்படும் கரங்களது காடு மேலும் மேலும் அடர்த்தியாகிச் செல்கிறது, அதேபோது இந்தக் கரங்கள் மேலும் மேலும் மெலிந்து செல்கின்றன.

மேலும் மேலும் பெருவீத அளவில் உற்பத்தி செய்ய வேண்டுமென்பது, அதாவது சிறு முதலாளியாயிராது பெருந்தொழிலதிபராக வேண்டுமென்பது முதற் பெரும் நிபந்தனை

களில் ஒன்றுய்க் கொண்டுள்ள ஒரு போட்டாபோட்டியில் குட்டி முதலாளி மீள முடியாமல் நசித்தே ஆக வேண்டு மென்பது கூறுமலே விளங்கும் ஒன்று.

மூலதனங்கள் பருமனிலும் எண்ணிக்கையிலும் அதிகரிக் கும் அதே அளவில், அதாவது மூலதனம் வளரும் அதே அளவில் மூலதனத்துக்குக் கிடைக்கும் வட்டி குறைகிறது; ஆகவே சிறு வட்டி வருமானத்தவர் இனி தமது வட்டியைக் கொண்டு வாழ முடியாமல் தொழில் துறைக்கு ஓடி வந்தாக வேண்டும்; இவ்விதம் குட்டி முதலாளிகளது அணிகளையும் இதன் மூலம் பாட்டாளி வர்க்கத்தினுள் புக வேண்டியோரது அணிகளையும் பெருகச் செய்ய உதவ வேண்டும்—மேற் கொண்டு இவற்றுக்கும் எந்த விளக்கமும் தேவையே இல்லை.

முடிவில், ஏற்கனவே இருந்து வரும் பிரம்மாண்டமான உற்பத்திச் சாதனங்களைப் பெருவீத அளவில் பயன்படுத்தும் படியும், இந்த நோக்கத்துடன் கடன் செலாவணியின் எல்லா மூல விசைகளையும் இயக்கும்படியும், மேலே நாம் விவரித்த இயக்கமானது முதலாளிகளைப் பலவந்தம் செய்கையில், இதற்கேற்ப தொழில் துறைப் பூகம்பங்கள் அதிகரிக்கின்றன; இந்தப் பூகம்பங்களின் போது செல்வத்தில் ஒரு பகுதியை, உற்பத்திப் பொருள்களிலும் மற்றும் உற்பத்தி சக்திகளி லுங்கூட ஒரு பகுதியைக் கீழ் உலகின் தேவதைகளுக்குக் காவு கொடுத்துதான் தொழில்-வாணிப உலகம் தன்னை அழிந்தொழியாது காத்துக்கொள்ள முடிகிறது—சுருங்கக் கூறின் நெருக்கடிகள் அதிகரிக்கின்றன. இவை மேலும் மேலும் அடிக்கடி நிகழ்வதோடு, மேலும் மேலும் கடுமையாகிச் செல்கின்றன. காரணம் என்னவெனில், பொருளுற்பத்திப் பரிமாணமும், ஆகவே முன்னிலும் விரிந்த சந்தைகளுக் கான தேவையும் பெருகப் பெருக, உலகச் சந்தையானது மேன்மேலும் சுருங்குகிறது, பயன்படுத்திக் கொள்வதற்கு எஞ்சியிருக்கும் புதிய சந்தைகள் மேன்மேலும் சொற்ப மாகிச் செல்கின்றன, ஏனென்றுல் இதுகாறும் வெற்றி கொள்ளப்படாதிருந்துள்ள அல்லது மேலெழுந்தவாரியாக வே பயன்படுத்தப்பட்டு வந்துள்ள சந்தையும் இதற்கு முந்திய ஒவ்வொரு நெருக்கடியாலும் உலக வர்த்தகத்தின் பிடிக்குள் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. ஆனுல் மூலதன மானது உழைப்பை அரித்துத் தின்று வாழ்வதோடு மட்டும்

நிற்கவில்லே. ஒருங்கே செல்வச் சீமானும் காட்டு மிராண்டியுமான இந்த மூலதனப் பிரபு தன்னேடுகூட தனது அடிமைகளது சடலங்களேயும், பலிக்கடாக்களாய் நெருக்கடிகளில் மந்தை மந்தையாய் மடியும் தொழிலாளர்களது சடலங்களேயும் சவக்குழிக்கு இழுத்துச் செல்கிறது. ஆக நாம் காண்பது என்னவெனில்: மூலதனம் விரைவாய் வளருமாயின், தொழிலாளர்களிடையிலான போட்டி ஒப்பிடற்கரியவாறு மேலும் விரைவாய் வளருகிறது, அதாவது தொழிலாளி வர்க்கத்தின் வேலே வாய்ப்புகளும் பிழைப்புச் சாதனங்களும் அதே அளவுக்கு விரைவாய்க் குறைகின்றன; ஆயினும் மூலதனத்தின் விரைவான வளர்ச்சியே கூலியுழைப்புக்கு மிகவும் சாதகமான நிலேமையாய் இருக்கின்றது.

*1847, டிசம்பரின் கடைப் பகுதியில்*
*நிகழ்த்திய விரிவுரைகளின் அடிப்படையில்*
*மார்க்ஸ் எழுதியது*

*1849 ஏப்ரல் 5-8, 11ஆம் தேதிகளது*
*Neue Rheinische Zeitung இதழ்கள் 264-267,*
*269ல் வெளியானது*

*எங்கெல்சால் பதிப்பிக்கப்பட்டு*
*முன்னுரையுடன்கூட தனிப் பிரசுரமாய்*
*1891ல் பெர்லினில் வெளிவந்தது*

## வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து, "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41. பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை—600098.

ஷோ-ரூம்

136. மவுண்ட் ரோடு, சென்னை—600002.

கிளைகள்

80. மேலக் கோபுர வீதி, மதுரை—625001.
87/89. ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001.
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.
செர்ரி ரோடு, சேலம்—636001.

விற்பனை நிலையங்கள்

3—22—75—D, மதுரை சாலை,
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.

ИБ № 11195

К. Маркс

НАЕМНЫЙ ТРУД И КАПИТАЛ

На чешском языке